# உதயன்

சுடர் : 36 கதிர் : 123 | திங்கட்கிழமை | பங்குனி 16 ஆம் நாள் 29 மார்ச் 2021 | வள்ளுவர் ஆண்டு 2051 | பக்கங்கள்: 16 விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111


## 872 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். சோதனைக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 29
யாழ்ப்பாணம் நகரப்பகுதி வர்த்தகர்கள் மற்றும் வர்த்தக நிலையப் பணியாளர் 15

## திருநெல்வேலி பாற்பண்ணை அபாய வலயமாக அறிவிப்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 29
அபாய இடர் வலயமாக திருநெல்வேலி பாற்பண்ணைப் பிரதேசம் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. அந்தப் பகுதியில் இருந்து மக்கள் வெளியேறவோ அல்லது உள்நுழையவோ அனுமதி மறுக்கப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலாளர் க.மகே 15



## கிட்டுப் பூங்கா முகப்பு எரிந்து நாசம்

(விரிவு 16ஆம் பக்கம்)

## பி.சி.ஆருக்கும் முண்டியடிப்பு!!

யாழ்ப்பாணம் நகர வர்த்தகர்கள் மற்றும் வர்த்தக நிலையப் பணியாளர்களுக்கு நேற்று பி.சி.ஆர். பரிசோதனைக்கான மாதிரிகள் எடுக்கப்பட்டன. எனினும் அங்கு தனிநபர் இடைவெளி கடைப்பிடிக்கப்படவில்லை. அந்த ஒளிப்படங்கள் சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டிருந்தமையுடன், கடுமையாக விமர்சனங்களும் பதிவிடப்பட்டிருந்தன. (எ)



# தொற்றாளர்கள் எண்ணிக்கை யாழ்ப்பாணத்தில் அதிகரிக்கும்

### மாவட்டச் செயலர் அபாய அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 29
யாழ்ப்பாணத்தில் அடுத்த சில நாள்களுக்குக் கொரோனாத் தொற்று அதிகரித்துப் பின்னர் குறைவடையும். பொதுமக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்கவேண்டும் என்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்துள்ளார். 15

## 360க்கு மேற்பட்டோர் கறுப்புப்பட்டியலில்!

கொழும்பு, மார்ச் 29
இலங்கையில் தடை செய்யப்பட்ட தனிநபர்கள் என 360 பேரின் பெயர்ப்பட்டியல் இலங்கை அரசால் வெளியிடப்பட்டுள்ளது. 7 புலம்பெயர் அமைப்புக்களும் தடை 15

## யாழ்ப்பாணம் கல்வி வலய பாடசாலைகளுக்குப் பூட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 29
யாழ்ப்பாணம் கல்வி வலயத்துக்கு உட்பட்ட அனைத்துப் பாடசாலைகளும் ஒரு வாரத்துக்கு மூடப்படுகின்றன என்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் க.மகேசன் 15

## புத்தூரில் தனித்து வசித்த ஆண் வெட்டிப் படுகொலை!

### நேற்று அதிகாலை கொடூரம்

யாழ்ப்பாணம், மார்ச் 29
புத்தூர் வீரவாணி பகுதியில் தனிமையில் வசித்த ஆணொருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். நால்வர் சந் 15

## போதனா மருத்துவமனையில் நேற்றும் 6 பேருக்குத் தொற்று!

### வடக்கில் 12 பேருக்கு கொரோனா

யாழ்ப்பாணம், மார்ச் 29
வடக்கு மாகாணத்தில் நேற்று 12 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர்களில் 6 பேர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையைச் சேர்ந்தவர்கள் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப் 15

## நிவாரணப் பட்டியல் மாற்றம்; துருவுகின்றது ஆணைக்குழு

யாழ்ப்பாணம், மார்ச் 29
கொரோனா இடர் காலத்தில் வழங்கப்பட்ட நிவாரணப் பொருள்களுக்குரிய பெயர்ப் பட்டியல் மாற்றப்பட்டமை தொடர்பில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு 15



## காங்கேசன்துறையில் திடீரென திரவப்படிவு

### ஆராய்கின்றது நாரா

யாழ்ப்பாணம், மார்ச் 29
காங்கேசசன்துறைக் கடற்பரப்பில் இனந்தெரியாத திரவப் படலம் ஒன்று காணப்படுகின்றது என்றும், அது தொடர்பில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்ப 15

## வாகனம் கழுவியவர் மின் தாக்கிச் சாவு!

### கிளிநொச்சியில் சோகம்

கிளிநொச்சி, மார்ச் 29
புளியம்பொக்கணை நாததம்பிரான் ஆலயம் செல்வதற்காக வாகனம் கழுவியவர் மின்சாரம் தாக்கியதில் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாரதிபுரம் பகுதியில் நேற்றுக் காலை 7.30 மணியளவில் இடம் 15

## குடும்பத் தலைவர் திடீரென உயிரிழப்பு

முல்லைத்தீவு, மார்ச் 29
தோட்டத்தில் பயிர்களுக்கு நீர் இறைத்துக்கொண்டிருந்த குடும்பத் தலைவர் மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளார். இந்தச்சம்பவம் 15

## பயனாளர் பட்டியல்களை மக்களுக்குக் காட்டாதீர்!

### அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுக்கும் அரசியல் தரப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 29
வீட்டுத் திட்டங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள பயனாளிகளின் பட்டியல் பொதுமக்களின் பார்வைக்கு காட்சிப்படுத்தப்பட்டு வரும் நிலையில், அவற்றைக் காட்சிப்படுத்த வேண்டாம் என்று 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமல் ஆக்கப்பட்டோரை மீட்க; அமெரிக்காவின் தலையீடு தேவை

## உறவினர்கள் கோரிக்கை

**வவுனியா, மார்ச் 29**

**காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகள் விடயத்துக்குத் தீர்வுகாண அமெரிக்கா தலையிட வேண்டும் என வலியுறுத்தி காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் வவுனியாவில் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.**






ஆர்ப்பாட்டத்தின்போது காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவித்ததாவது;

இன்று நாம் ஒரு மைல்கல்லை எட்டியுள்ளோம். எங்களது ஒரு நாளைக்கு ஒரு நேர தொடர் உணவுத்தவிர்ப்பு போராட்டம் ஆயிரத்து 500 ஆவது நாள்களை எட்டியுள்ளது. தமிழர்கள் விரும்பும் தீர்வுகள் கிடைக்கும்வரை எமது போராட்டங்கள் தொடரும். காணாமல் ஆக்கப்பட்ட எங்கள் பிள்ளைகளைக் கண்டுபிடிக்க உதவுமாறு இந்தப் போராட்டத்தின் முதல் நாளில் இருந்து அமெரிக்காவையும் ஐரோப்பிய ஒன்றியத்தையும் அழைத்தோம். அவை உலகில் பல சிக்கல்களைத் தீர்த்தன. இந்தியா எங்களுக்கு உதவ வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். ஆனால் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அமர்வில் அவர்களின் போலி நடுநிலைமை தமிழர்களுக்கு உதவ இந்தியா தயாராக இல்லை என்பதைக் காட்டுகிறது. பல தமிழ் அரசியல்வாதிகள் மற்றும் தமிழ் சிந்தனையாளர்கள் அமெரிக்காவை அழைக்கும் எங்கள் கருத்தை எப்போதும் நிராகரிக்கின்றனர். பெரும்பாலான அரசியல்வாதிகள் எங்கள் போராட்டக் களத்துக்கு வர விரும்பவில்லை. ஏனெனில் அமெரிக்கக் கொடியுடன் படம் எடுப்பது இந்தியாவுக்கும், இலங்கைக்கும் பிடிக்காது என்பதாலாகும். இப்போது அவர்களில் பெரும்பாலானோர் எமது அரசியல் பிரச்சினையை அமெரிக்காவால் மட்டுமே தீர்க்க முடியும் என்ற உண்மையை ஏற்றுக்கொள்கிறார்கள் என்றனர். (பவ18)

# பாற்பண்ணை மக்களுக்கு விழிப்புணர்வுச் செயற்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 29

யாழ். மாவட்ட கொரோனாத் தடுப்பு செயலணியால், கண்காணிப்பு வலயமாக அறிவிக்கப்பட்டுள்ள திருநெல்வேலி, பாற்பண்ணை கிராமத்தில் யாழ். மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவினரால் விழிப்புணர்வுச் செயற்பாடுகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன.

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட திருநெல்வேலி பாற்பண்ணை கிராமத்தில் நேற்று முன்தினம் 51 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது. இதனையடுத்து நேற்று யாழ். மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட கொரோனாத் தடுப்பு செயலணியின் கூட்டத்தின் தீர்மானத்தின்படி குறித்த பகுதி கண்காணிப்பு வலயமாக அறிவிக்கப்பட்டது. இதனையடுத்து யாழ். மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவினரால் நேற்று மாலை கொரோனா தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகள் ஒலிபெருக்கி மூலம் மக்களுக்கு முன்னெடுக்கப்பட்டது.

இந்த நடவடிக்கையில் யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் ரீ.என்.சூரியராஜா மற்றும் கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோர் உள்ளிட்டவர்களும் கலந்துகொண்டிருந்தனர். (ப20)

# மன்னாரில் விபத்து 2 பெண்கள் காயம்





மன்னார், மார்ச் 29

மன்னார் உயிலங்குளம் சந்தியில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்துச் சம்பவம் ஒன்றில் சிக்கி இரண்டு பெண்கள் காயமடைந்துள்ளனர்.

முருங்கன் பகுதியில் இருந்து வந்த வாகனம் ஒன்றும், மன்னார் பகுதியில் இருந்து வந்த மோட்டார் சைக்கிள் ஒன்றும் மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரண்டு பெண்களே காயமடைந்தனர். அவர்கள் மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். விபத்து தொடர்பான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்தனர். (ப213)

# மழைக்கு வாய்ப்பு

கொழும்பு, மார்ச் 29

நாட்டின் சில இடங்களில் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

சப்ரகமுவ, தென், மேல், மத்திய வடமேல் மற்றும் ஊவா மாகாணங்களில் மழை பெய்வதற்கான சாத்தியம் காணப்படுகின்றது என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

புத்தளத்திலிருந்து காங்கேசன்துறை, மட்டக்களப்பு மற்றும் ஹம்பாந்தோட்டை ஊடாக காலி வரையானகடற்பரப்புகளில் காற்றானது வடகிழக்கு முதல் கிழக்கு வரையான திசைகளிலிருந்து வீசக்கூடும்.

நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகளில் காற்றானது மாறுபட்ட திசைகளிலிருந்து வீசக்கூடும்.

காற்றின் வேகம் 20-30 கிலோ மீற்றர் வரை காணப்படும்.

காலியிலிருந்து ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகள் ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கஇ)

# நானாட்டான் சபையின் நடவடிக்கைகள் முடக்கம்

## சபைத் தவிசாளர் தெரிவிப்பு

மன்னார், மார்ச் 29

தனிமைப்படுத்தல் செயற்பாட்டால் நானாட்டான் பிரதேச சபை நடவடிக்கைகள் முடங்கியுள்ளன என்று சபைத் தவிசாளர் தி. பரஞ்சோதி தெரிவித்துள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் வடக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களைப் பலப்படுத்துவது தொடர்பான கூட்டம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட யாழ். மாநகர சபை முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணனுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டதை அடுத்து அவரோடு தொடர்பில் இருந்த பலர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அதனால் நானாட்டான் பிரதேச சபை தவிசாளர் தி.பரஞ்சோதியும் நேற்று முன்தினம் மன்னார் சுகாதாரத் துறையினரால் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

இதுதொடர்பாக தவிசாளர் பரஞ்சோதியை தொடர்புகொண்டபோது அவர் மேலும் தெரிவித்ததாவது;

இந்தத் தனிமைப்படுத்தல் செயற்பாட்டால் சபை நடவடிக்கைகள் முற்றாக முடக்கப்பட்டுள்ளன. சுகாதார நடைமுறைகள், தனிமைப்படுத்தல் சட்டம் என்பதை மன்னார் மாவட்டத்தில் உள்ள மக்களுக்கு மட்டுமா? இந்த விடயத்தில் சுகாதாரத் துறையினர் சரியான முறையில் செயற்பட வேண்டும். கொரோனாவை நம் நாட்டிலிருந்து கட்டுப்படுத்த வேண்டுமாயின் சுகாதார நடைமுறைகள் மற்றும் தனிமைப்படுத்தல் சட்டம் என்பவை அனைவருக்கும் பொதுவானதாக இருக்க வேண்டும் என்றார். (ம-213)



உலக நீர் தினத்தை முன்னிட்டு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் யாழ். அலுவலகத்தின் ஏற்பாட்டில், அல்லைப்பிட்டி குடிநீர் விநியோகத் திட்டத்தில் சபையின் யாழ். அலுவலக பொறுப்பதிகாரி ஷா.தாரகா தலைமையில் மர நடுகை நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. (யா159)

# சிறுபோகக் கூட்டங்கள்

கிளிநொச்சி, மார்ச் 29

கிளிநொச்சி அக்கராயன் குளத்தின் கீழான சிறுபோக நெற்செய்கைக் கூட்டம் இன்று காலை 9 மணிக்கு அக்கராயன் நீர்ப்பாசன விடுதியில் நடைபெறவுள்ளது.

இதில் அனைத்து விவசாயிகளையும் கலந்துகொள்ளுமாறு நாகதம்பிரான் கமக்கார அமைப்பின் தலைவர் சி.கனகசபாபதி அறிவித்துள்ளார்.

இதேவேளை, புதுமுறிப்புக் குளத்துக்கான சிறுபோகக் கூட்டமும் இன்று மாலை 1 மணிக்கு புதுமுறிப்பு பொது மண்டபத்தில் நடைபெறவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமுத்திர அதிகாரப் போருக்கு இலங்கை ஒருபோதும் பலியாகாது!

## ஜனாதிபதி கோத்தாபய கருத்து

**கொழும்பு, மார்ச் 29**

**ஜெனிவா அழுத்தத்துக்கு நாம் அச்சமின்றி முகங் கொடுப்போம். அதற்கு அடிபணியாமல் இருக்க முடியும். இலங்கை ஒரு சுதந்திர நாடு. இந்து சமுத்திர அதிகாரப் போராட்டத்துக்கு நாங்கள் பலியாக மாட்டோம்.**

இவ்வாறு மாத்தறையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை வழங்குவது அரசாங்கத்தின் கடப்பாடாகும்.

இது அதிகாரிகளதும் பொறுப்பு. நாட்டின் பொருளாதாரத்தை மிகவும் பயனுள்ள முறையில் வலுப்படுத்தும் அதேநேரம் கிராமப்புற மக்களின் பிரச்சினைகளை தீர்க்க முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

கடந்த அரசாங்கத்தில் இருந்த பிரபலமானவர்கள் பலர் ஒருபோதும் ஆட்சியில் இருக்காதவர்களைப் போன்று இன்று பேசுகிறார்கள். ஈஸ்டர் தாக்குதல், எம்.சி.சி ஒப்பந்தம் என கிழக்கு முனைய சிக்கல்கள் அவர்கள் ஏற்படுத்திய பிரச்சினைகள். இப்போது அவர்கள் எங்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். எதிர்த் தரப்பினரால் மேற்கொள்ளப்படும் தவறான பரப்புரைகளால் ஏமாற்றமடைவதால் ஏற்படும் சேதத்தை சரிசெய்ய முடியாது. அன்று கொழும்பு நகரம் பசுமை நகரமாக உருவாக்கப்பட்டது.


2030ஆம் ஆண்டளவில் 70 வீதமான சக்தி வளத் தேவைகள் மீள் பிறப்பாக்க மூலங்களிலிருந்து உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது.

7ஆயிரத்துக்கும் மேற்பட்ட சூரிய சக்தி அமைப்புகளிலிருந்து பிரதான மின் கட்டத்துக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இரசாயன உரங்களின் பயன்பாடு ஒவ்வொரு ஆண்டும் 25 சதவீதம் குறைக்கப்படுகிறது.

இவை அனைத்தும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதோடு பொருளாதாரத்தை வலுப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்ட திட்டங்கள்.

இந்த முன்னேற்றங்களை சகித்துக்கொள்ளமுடியாத உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சக்திகளும் அவர்களுக்கு ஆதரவளிக்கும் மாபியா குழுக்களும் பொய்களை உருவாக்கி மக்களைத் தவறாக வழிநடத்துகின்றன.

என்ன செய்யப்படுகிறது என்பதை சரியாக பார்க்காமல் தவறான கருத்துக்களால் ஏமாற்றமடைந்தால், கடந்த ஐந்து ஆண்டுகளில் ஏற்பட்ட சேதம் மீண்டும் நிகழலாம். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவை தோற்கடித்து செய்த தவறை மீளவும் செய்யக்கூடாது. அப்படி நடந்தால் அந்த சேதத்தை சரிசெய்வது எளிதானதல்ல என்றார். (ம)



## தே.எண்ணெய் தரப் பரிசோதனை; தரமற்ற மாதிரி கண்டறிவு

கொழும்பு, மார்ச் 29

இறக்குமதி செய்யப்பட்ட 13 தேங்காய் எண்ணெய் கொள்கலன்களில் புற்றுநோயை ஏற்படுத்தக் கூடிய இரசாயனம் அடங்கியுள்ளது என்று வெளிப்படுத்தப் பட்ட தகவல் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட சோதனையில் தேங்காய் எண்ணெய் இறக்குமதியாளர்கள் நால்வரில் ஒருவர் சமர்ப்பித்த மாதிரி தரமற்றது எனக் கண்டறியப்பட்டுள்ளது.

இலங்கை தர நிர்ணய நிறுவனத்தால் முன்னெடுக்கப்பட்ட சோதனையில் இந்த விடயம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து, குறித்த தரமற்ற தேங்காய் எண்ணெயைத் திருப்பியனுப்ப நடவடிக்கையை முன்னெடுக்குமாறு சுங்கத் திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏனைய மூன்று இறக்குமதியாளர்களால் இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெயின் மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இறக்குமதியாகும் தேங்காய் எண்ணெயின் தரம் தொடர்பில் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பப்பட்டிருந்தது.

இதனையடுத்து, நுகர்வோர் விவகார அதிகார சபை சந்தையில் விற்பனையாகும் தேங்காய் எண்ணெயின் தரத்தை பரிசோதிக்க நடவடிக்கை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## மேல் மாகாணத்தின் கற்றல் செயற்பாடுகள் இன்று மீள ஆரம்பம்!

கொழும்பு, மார்ச் 29

மேல் மாகாணத்திலுள்ள அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளின், இந்த ஆண்டுக்கான கற்றல் செயற்பாடுகள் இன்று மீள ஆரம்பிக்கப் படவுள்ளன என்று கல்வி அமைச்சின் செயலாளர் கபில பெரேராவால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சுற்றறிக்கை மாகாண பிரதான செயலாளர்கள், மாகாண கல்வி செயலாளர்கள், மாகாணக் கல்வி பணிப்பாளர்கள், வலயக் கல்வி பணிப்பாளர்கள் மற்றும் அதிபர்கள் ஆகியோருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இந்த சுற்றிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளிலுள்ள பாடசாலைகளை தனிமைப்படுத்தல் காலம் நிறைவடையும் வரையில் தற்காலிகமாக மூடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும், பாடசாலைகள் ஆரம்பிக்கப் பட்ட பின்னர், மாணவர்களை பாடசாலை சூழலுக்கு பழக்கப்படுத்துவதோடு, அவர்களது உளவியல் சுகாதாரத்தை மேம்படுத்தும் வகையில் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

பாடசாலைகள் மீளத் திறக்கப்பட்ட பின்னர் மாணவர்களை பரீட்சைகள் அல்லது போட்டிகளுக்கு வழிநடத்துவதை தவிர்த்துக்கொள்ள வேண்டும், சமூக இடைவெளியைப் பேணி கற்றல் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் வழமைக்குத் திரும்புகின்ற நிலையில், கல்வி மற்றும் கல்வி சாரா ஊழியர்கள் வழமை போன்று பாடசாலைக்கு சமூகமளிக்க வேண்டும் போன்ற அறிவுறுத்தல்கள் அந்தச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. (ற-இ)

## பஸ் மோதி ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு,மார்ச் 29

வீதியைக் கடக்க முற்பட்ட நபரை மோட்டார் சைக்கிள் மோதித் தள்ளிய போது, பின் இருக்கையில் பயணித்தவர், எதிரே வந்த பஸ்ஸுடன் மோதி விபத்துக்குள்ளாகினார். அதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த விபத்து மினுவாங்கொட, நில்பனாகொட, ஹுரிகஹமுலப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் காலை நடந்துள்ளது.

இருவருடன் பயணித்த மோட்டார் சைக்கிள், வீதியைக் கடந்தவரை மோதித் தள்ளியது. இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் தூக்கி வீசப்பட்டார். அவரை தனிமைப்படுத்தலுக்காக இராணுவத்தினரை அழைத்துச் சென்ற பஸ் மோதித் தள்ளியது.

விபத்து தொடர்பான காட்சி, அருகில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி கமராவில் பதிவாகியுள்ளது. இக்காட்சி சமூக வலைத்தளங்களிலும் பகிரப்பட்டுள்ளது. (சு-இ)

## நச்சு கொள்கலனுள் தே.எண்ணெய்; வர்த்தகருக்கு ரூ. 60,000 தண்டம்

கொழும்பு, மார்ச் 29

நச்சுப்பொருள் கலந்த இரும்புக் கொள்கலனுக்குள் தேங்காய் எண்ணெய் மற்றும் பாம் எண்ணெய் ஆகியவற்றை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட வர்த்தகர் ஒருவருக்கு 60 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் பொதுச் சுகாதார பரிசோதகர்களால் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பின் போதே குறித்த மாதிரி கண்டறியப்பட்டுள்ளது.

அத்துடன் கைப்பற்றப்பட்ட தேங்காய் எண்ணெயை அழிக்குமாறும் இவ்வாறான குற்றச் செயல்கள் மீள இடம்பெறுமாயின் வர்த்தக நிலையத்துக்கு தடை விதிக்குமாறும் கொழும்பு மாநகர சபையின் பொது சுகாதார பரிசோதகர்களுக்கு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ச-இ)

## பசறை விபத்து
## பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்க முடிவு!

பதுளை, மார்ச் 29

பசறை விபத்தில் பாதிக்கப்பட்டோருக்கு இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரியவருகின்றது.

விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு 95 ஆயிரம் ரூபா வீதமும், காயமடைந்த 32 பேருக்கு 15 ஆயிரம் ரூபா வீதமும் இழப்பீட்டுத் தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உயிரிழந்தோருக்கான இழப்பீட்டுத் தொகையில் 30 ஆயிரம் ரூபாவை ஊவா மாகாண ஆளுநர் அலுவலகமும், 25ஆயிரம் ரூபாவை போக்குவரத்து ஆணைக்குழுவும், 25ஆயிரம் ரூபாவை காப்புறுதி நிறுவனமும், 15 ஆயிரம் ரூபாவை ஊவா மாகாண போக்குவரத்து அதிகார சபையும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (வ-இ)

## விசேட கருத்தரங்கு


வவுனியா, மார்ச் 29

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில், இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு வவுனியா உள்வட்ட வீதியில் அமைந்துள்ள பலநோக்கு மண்டபத்தில் விசேட கருத்தரங்கு ஒன்று இடம் பெறவுள்ளது.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டே இந்தக் கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் மன்னார் மாவட்டச் செயலர், மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் மற்றும் உதவி விவசாயப் பணிப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கவுள்ளனர். (ற-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முஸ்லிம் காங்கிரஸை வம்புக்கு இழுக்காதீர்

## தலைவர் ஹக்கீம் எச்சரிக்கை

அம்பாறை,மார்ச் 29

ஆட்சியாளர்களுக்குப் படம் காட்டுவதற்காக, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸை எவரும் வம்புக்கு இழுக்கத் தேவையில்லை என்று கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் எச்சரித்துள்ளார்.

சம்மாந்துறை பிரதேச முஸ்லிம் காங்கிரஸ் போராளிகள் குழுமத்தின் நான்காவது ஆண்டு நிறைவு விழாவில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்யும் இடத்துக்குச் சென்று சிலர் படம் காட்டுகின்றனர். தேவை இல்லாமல் வாய் உளறி பிரச்சினைக்குள் மாட்டிக் கொள்கின்றனர். இதன் பின்னணி என்ன என்பதை நான் நன்றாக அறிந்துள்ளேன்.

இந்த நாட்டின் ஆட்சியாளர்களின் போக்கையும் அறிந்து வைத்துள்ளேன். கட்சியைப் பல தடவை நீதிமன்றத்தில் நிறுத்தியவர்களும் இவர்களே.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆட்சியாளர்களுடன் வாய்திறப்பதில்லை, யாரையும் தேவையில்லாமல் மலினப்படுத்தவும் இல்லை. பலருக்கும் பல பிரச்சினைகள் இருக்கின்றன. பிராந்திய ரீதியான பிரச்சினை, அவர்களுடைய அரசியல் தொடர்பிலான பல சிக்கல்கள் இருக்கலாம். அதைப்பற்றி தாராளமாகத் தெரிந்தவன், புரிந்துகொண்டவன் என்ற அடிப்படையில் விட்டுக் கொடுப்புக்களைச் செய்து கொண்டுதான் இருக்கிறேன்.

நான் யாரையும் அவசரப்பட்டு கட்சியை விட்டு விரட்ட விரும்புவதில்லை. அவர்களாகவே அவர்களை விரட்டக்கூடிய நிலைமையை உருவாக்காமல் இருப்பது நல்லது. சிலர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவில்லாமல் முதலமைச்சராக வந்திருக்க முடியாது. இப்போது புதிய எஜமானர்களைக் கண்டதும் அதனையெல்லாம் மறந்துவிட்டனர்- என்றார். (க-இ)

# வீரகெடியவில் புதிய கொத்தணி

**24 பேருக்கு கொரோனா**

கொழும்பு.மார்ச் 29

வீரகெடிய பிரதேசத்தில் கொரோனாத் தொற்றாளர்கள் 24 பேர் இனங்காணப்பட்டுள்ளனர். அதனால் அங்கு புதிய கொத்தணி உருவாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

250 பேரிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்று வீரகெடிய சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது.

தற்போதைய நிலவரத்தின்படி வீரகெடிய நகர் ஆபத்தான பகுதியாக மாறியுள்ளது என்று வீரகெடிய பிரதேச சபைத் தலைவர் பியசேன லியனஆராச்சி தெரிவித்துள்ளார். அதனால் பிரதான சந்தை மூடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் வர்த்தக நிலையங்களையும் மூடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

# விமான நிலைய கடைகள் திறப்பு

கொழும்பு,மார்ச் 29

கட்டுநாயக்க விமான நிலையத்தில் கடமை இலவசம்( duty free) கடைகள் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் இருந்து வருகை தந்தவர்கள், தனிமைப்படுத்தலை முடித்த பின்னர் விமா ன நிலையம் மற்றும் விமான போக்குவரத்து ஆணையத்தின் வலைத்தளம் மூலம் பதிவு செய்து இந்தச் சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இது தொடர்பான மேலதிக தகவல்களுக்கு 011 22263017 என்று தொலைபேசி இலக்கத்தையும், airport.lk என்ற இணையத்தளத்தையும் தொடர்பு கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(க-இ)

# கிழக்கு மாகாணத்தை கையகப்படுத்த முயற்சி

## இதற்கு சிலர் கைக்கூலி என்கிறார் சாணக்கியன்



**கல்முனை,மார்ச் 29**

**கிழக்கு மாகாணத்தை தமிழ் பேசும் மக்களின் தாயகம் என்பதை மாற்றி, பெரும்பான்மை கொண்ட சமூகமாகக் கொண்டுவருவது தான் அரசின் நோக்கமாகும். அதற்கு சிலர் கைக்கூலியாகச் செயற்படுகின்றனர்.**

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

அம்பாறை கல்முனையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வீழ்ச்சி அடைந்து செல்வதற்கு காரணம் பொய்ச் செய்திகளைப் பரப்புவதனால் ஆகும். வடக்கிலும், கிழக்கி லும் நிலைமைகள் வேறு. வடக்கில் 20 வருடங்கள் சென்ற பின்பு பிள்ளைகள் அப்பா, அம்மா என்று தான் அழைப்பார்கள்.

கிழக்கு மாகாணத்தில் வாப்பா உம்மா என்று தான் கூறுவார்கள் என்று திருகோணமலையில் ஒருவர் கூறியிருந்தார். அந்த இடத்தில் நான் கூறியிருந்தேன் கிழக்கு மாகாணத்தில் 10 ,15 வருடங்களுக்குப் பின்னர் அம்மாவும் அப்பாவும் இல்லை. வாப்பாவும், உம்மாவும் இல்லை. அம்மே, தாத்தே என்று தான் அழைப்பார்கள் என்று. அந்த நிலைமையை கிழக்கு மாகாணத்தில் தற்போது விதைக்கப்படு கின்றன. என்றார். (க-இ)

# 1,500 நாள்களைக் கடந்தது உறவுகளின் போராட்டம்

வவுனியா, மார்ச், 29

வவுனியாவில் சுழற்சிமுறை உணவுத் தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகளின் போராட்டம் நேற்றுடன் ஆயிரத்து 500 நாள்களை எட்டியுள்ளது. அதனை முன்னிட்டு அவர்களால் கவனவீர்ப்பு பேரணி ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் வவுனியா, ஏ9 வீதியில், வீதி அபிவிருத்தி அதிகார சபை முன்பாக சுழற்சி முறையில் முன்னெடுக்கப்படும் போராட்டம் ஆயிரத்து 500 நாள்களை எட்டியுள்ளது.

அதை முன்னிட்டு வவுனியா கந்தசாமி ஆலயத்தில் காணாமல் ஆக்கப்பட்டோருக்காக வழிபட்டு மணிக்கூட்டு கோபுர வீதி ஊடாக ஊர்வலமாக வந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தமது போராட்ட கொட்டகை முன்பாக கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் போன்றவற்றின் கொடிகளை ஏந்தியிருந்ததுடன், எங்களுக்கு அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் தேவை என்ற பதாதைகளை ஏந்தியிருந்தனர். இதன்போது தாய்மார் கண்ணீர் மல்க கதறி அழுத்து தமது பிள்ளைகள் தமக்கு வேண்டும் எனக் கோரியிருந்தனர். (வ.110, 18)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விபத்தால்

# 24 மணிநேரத்தில் 11 உயிரிழப்புகள்!

கொழும்பு, மார்ச் 29

நாட்டில் நேற்றுமுன்தினம் தொடக்கம் நேற்று வரையான 24 மணிநேரத்தில் இடம்பெற்ற விபத்துக்களில் 11 பேர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இவற்றில் 8 உயிரிழப்புக்கள் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்துக்களால் ஏற்பட்டன என்றும் ஏனைய 3 உயிரிழப்புக்களும் ஏற்கனவே இடம்பெற்ற விபத்துக்களில் சிக்குண்டு மருத்துவமனைகளில் சிகிச்சைபெற்று வந்தவர்களால் ஏற்பட்டன என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இவர்களில் 3 பேர் பாதசாரிகள், 4 பேர் பயணிகள் மற்றும் 4 பேர் உந்துருளிச் சாரதிகள் எனவும் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ற-இ)

# குளிக்கப் போய் சேறுபூசுதல்

இப்போது கொரோனா மையங்கொண்டிருப்பது வடக்கில். இதுவரை தசம எண்களில் மாத்திரமே வடக்கில் இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை இப்போது சதத்தை தாண்டியதாக தினமும் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றது. இதற்குப் பல காரணங்கள் உள்ளன. சுகாதார நடைமுறைகளை அறவே கடைப்பிடிக்காத நிலைமை, மற்றும் அரசின் மெத்தனப் போக்கு என்பனவே இப்படி திடீரென வடக்கில் கொரோனா விஸ்வரூப மெடுப்பதற்கான காரணிகளில் முதன்மையானவை.

நீதிக்கான போராட்டங்களை ஒடுக்குவதற்காக மாத்திரமே 'கொரோனா சட்டங்களை' தூக்கிப் பிடித்துக் கொண்டு வரும் பொலிஸார், அவற்றை ஏனைய நாள்களில் கொரோனா பரவும் அபாயமுள்ள பகுதிகளில் நடைமுறைப்படுத்த துளியும் அக்கறை காட்டியதில்லை. அதேபோல மக்களும் கொரோனாவை கிஞ்சித்தும் மதிப்பதில்லை. அதற்கான விலையே இப்போது பெருகிக் கொண்டிருக்கும் கொரோனாத் தொற்றாளர்கள்.

வடக்கில் குறிப்பாக யாழ்.நகர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் கடைத்தொகுதிகளை மையமாகக் கொண்டே இம்முறை கொரோனாக் கொத்தணிகள் இனங்காணப்பட்டிருந்தன. அதனையடுத்து அந்தப் பகுதிகள் தற்போது முடக்கப்பட்டுள்ளன. அந்த முடக்க நிலையில் இருந்து யாழ்.நகர் கடைத்தொகுதிகள் விடுவிக்கப்பட வேண்டுமானால் அந்தப் பகுதியில் இருக்கும் வர்த்தக நிலையங்களில் பணிபுரியும் சகலரும் பி.சி.ஆர். பரிசோதனை செய்து, தனக்கு கொரோனா இல்லை என்ற சான்றிதழைச் சமர்ப்பிக்க வேண்டுமென கொரோனாச் செயலணித் தலைவரும், இராணுவத் தளபதியுமான சவேந்திர சில்வா உறுதியாக சொல்லியிருந்தார்.

இதனையடுத்து அந்தக் கடைத்தொகுதியைச் சேர்ந்தவர்களுக்கு, யாழ். நகரின் நவீன சந்தைக் கட்டடத் தொகுதியில் பி.சி.ஆர். பரிசோதனைகள் நேற்று இடம்பெறுமென அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த அறிவிப்பையடுத்து, பி.சி.ஆர். பரிசோதனை நடத்தப்படுமென அறிவிக்கப்பட்ட இடங்களில் தேர்த்திருவிழாவைப் போல பெரும் சனக்கூட்டம். இத்தனைக்கும் நெரிசலான தொடர்பாடலே கொரோனாவைப் பரம்பலடையச் செய்வதற்கான முக்கிய காரணி. எனவே பி.சி.ஆர். பரிசோதனை செய்யப்போகிறோம் என ஒன்று திரண்டவர்களால் புதியதொரு கொரோனாக் கொத்தணி உருவாவதற்கான அடித்தளம் போடப்பட்டு விட்டது. இங்கு பி.சி.ஆர். பரிசோதனையைச் செய்யவேண்டாமென்றுச் சொல்வது எமது நோக்கமல்ல. மாறாக இருக்கின்ற பிரச்சினையை கொரோனா இன்னும் தீவிரப்படுத்தியிருப்பதை வெளிக்கொணர வேண்டும்.

இப்படி பி.சி.ஆர் பரிசோதனை செய்வதற்காக, கட்டுப்பாடின்றி, சுகாதார நடைமுறைகளை மீறி, வகைதொகையின்றி நூற்றுக்கணக்கானோர் ஓரிடத்தில் கூடியமைக்கு சுகாதாரத் துறையின் பங்கு பெரியது. இந்தப் பி.சி.ஆர் பரிசோதனையில் ஒரு ஒழுங்கு முறைக்கேற்ப சுழற்சி முறையில் ஒவ்வொரு கடைகளையும் சேர்ந்தவர்களுக்கு இந்த இடத்தில் குறிக்கப்பட்ட நேரத்தில் பரிசோதனை செய்ய ஒழுங்கு செய்திருந்தால் இப்படி கூட்டம் கூடவேண்டிய அவசியம் எழுந்திருக்காது. அல்லது குறித்த கட்டடத் தொகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களில் பணிபுரிவோரின் விவரத்தைத் திரட்டி, அவர்களுக்கு 'டோக்கன்' வழங்கி, அதிலுள்ள எண்ணின் பிரகாரமே பி.சி.ஆர் என்றாலும் ஓரளவுக்கு கூட்டத்தைக் கட்டுப்படுத்தியிருக்கலாம். ஆனால் அப்படி எந்த எத்தனமும் அங்கு மேற்கொள்ளப்படவில்லை. மரணச் சடங்குக்கு கூட 25 பேருக்கு மேல் கலந்து கொள்ளக்கூடாது என சட்டம் போடும் சுகாதாரத்துறை, பி.சி.ஆர் பரிசோதனையின் போது மாத்திரம் அந்த விதியைக் காற்றில் பறக்கவிட்டதேன்? ஒருவேளை பி.சி, ஆர் பரிசோதனை செய்யச் செல்பவர்களை கொரோனா பீடிக்காது என்று அரசாங்கத்தைச் சேர்ந்தவர்கள் நம்புகிறார்களோ தெரியவில்லை.

இருப்பினும், எவ்வித ஒழுங்கு நடைமுறைகளும் பின்பற்றப்படாமல், பெருமளவானோரை ஓரிடத்தில் திரட்டி செய்யப்படும் பி.சி.ஆர் பரிசோதனைகளால் தொற்று கண்டுபிடிக்கப்படுகின்றதோ இல்லையோ, புதிய கொரோனாக் கொத்தணிகளை வேண்டுமானால் உருவாக்க முடியும். இந்த பி.சி.ஆர்.பரிசோதனைகளைப் பார்க்கும்போது 'குளிக்கப் போய் சேறு பூசிக்கொண்டதைப் போல' இப்போது பி.சி.ஆர் செய்யப்போய் கொரோனா வாங்கி வந்த கதையாகத்தான் முடியப்போகின்றது போலும்.




# பயங்கரவாத சட்டத்தால் மக்களுக்கே பேராபத்து

சட்டத்தரணி அச்சலா தெரிவிப்பு

**கொழும்பு, மார்ச் 29**

**நாட்டில் பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்பில் கொண்டுவரப்பட்ட வர்த்தமானி அறிவிப்பு தொடர்பில், நாங்கள் கவனம் செலுத்தவில்லை. ஆனால் அந்த வர்த்தமானி அறிவிப்பு மூலம் ஒரு வருடத்துக்கு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தாமல் ஒருவரை வைத்திருக்க வாய்ப்புள்ளது. இந்த நிலைமை மிகவும் ஆபத்தானது. மக்களே பாதிப்பை எதிர்கொள்ள நேரிடும்.**

இவ்வாறு சட்டத்தரணியும், சிவில் சமூக செயற்பாட்டாளருமான அச்சலா செனவிரத்ன தெரிவித்தார்.

"இலங்கை தேசத்தின் நீதி, நேர்மைக்காக மக்களின் போராட்டம்" என்ற தொனிப்பொருளில் கொழும்பில் இடம்பெற்ற போராட்டத்தின் பின்னர், ஊடகங்களுக்கு அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கையை இராணுவ ஆட்சிக்குள் தள்ளி, மியான்மர் நாட்டைப் போன்று மாற்றுவதற்கு அரசு முயற்சிக்கின்றது என்று சிவில் அமைப்புகளால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இந்த நடைமுறை நாட்டு மக்களுக்கு மிகவும் சாதகமற்ற சூழ்நிலையை உருவாக்கியுள்ளது. விசாரணையின்றி தடுப்புக்காவலைப் பயன்படுத்தும் அரசின் கொள்கைக்குப் போதுமான எதிர்ப்புகள் நாட்டில் வெளிப்படுத்தப்படுவதில்லை. நாட்டை இராணுவ மயமாக்காதீர்கள். மக்களின் எதிர்பார்ப்புக்களை அழிக்க வேண்டாம். இலங்கையின் வெளிநாட்டு தொழிலாளர்களை துன்புறுத்த வேண்டாம். இனக்குழுக்களுக்குப் பாகுபாடு காட்ட வேண்டாம். சட்டத்தின் ஆட்சிக்கு பாதிப்பு ஏற்படுத்தாதீர்கள்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தால், இனவெறி அல்லது மதத்தைப் பற்றி பேசுவதாக சந்தேகத்தின் பேரில் எவரையும் நாளை கைது செய்வதற்கான வாய்ப்பு உள்ளது. அத்துடன் பெண்களுக்கும் பாதுகாப்பற்ற நாடாக இலங்கை மாறி வருகின்றது- என்றார். (க-இ)

# பெண்களுக்காக தொழில் சட்டம்

தொழில் அமைச்சு நடவடிக்கை

கொழும்பு,மார்ச் 29

தொழிற்சங்கங்களில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்காக, தொழிற்சங்கக் கட்டளைச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும். அதற்கான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும் என்று தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

தம்புள்ளை தொழிலாளர் அலுவலகக் கட்டடத் திறப்பு விழாவில் அவர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டில் மொத்தத் தொழிலாளர்களில் 35 சதவீதமானவர்கள் பெண்களாவர். அத்துடன் தொழிற்சங்கங்கள் அரசியலுடன் இணையாமல் சுதந்திரமாகச் செயற்பட வேண்டும். இல்லையென்றால் தீர்க்க முடியாத பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் தொழிற்சங்க இயக்கத்தை ஒழுங்குபடுத்தும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (க-இ)

# இந்த வருடத்தில் 4,907 பேருக்கு டெங்கு

கொழும்பு,மார்ச் 29

நாட்டில் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 4 ஆயிரத்து 907 டெங்குத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவு தெரிவித்துள்ளது.

அவர்களில் அதிகளவானோர் மட்டக்களப்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளனர். அங்கு இதுவரை 2 ஆயிரத்து 458 பேருக்கு டெங்குத் தொற்று ஏற்பட்டுள்ளது. கடந்த மாதம் மட்டும் ஆயிரத்து 70 டெங்குத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் வரலாற்றில் மிக மோசமான புத்தாண்டு

## எதிர்க்கட்சி கொந்தளிப்பு



**கொழும்பு, மார்ச் 29**
**இலங்கை வரலாற்றில் மிக மோசமான சித்திரைப் புத் தாண்டை மக்கள், இந்த வருடம் கொண்டாட வுள்ளனர். கொரோனா நெருக்கடி ஒருபுறம். மறுபு றம் மக்களின் வாழ்க்கைச் செலவு.**

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்தார். கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
நாட்டில் தற்போது சுற்றாடல் பாதிப்பு இடம்பெறுவதில்லை என்று அரச தரப்பு கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. சூழலுக்கு ஏற்படுத்தப்படும் அழிவுகளை நேரில் காண்பவர்களே அதைப்பற்றிய கருத்துக்களைத் தெரிவிக்கின்றனர். இவ்வாறு கருத்துத் தெரிவிப்பவர்கள் தற்போது தேசத்துரோகிகளைப் போன்றும், தீவிரவாதிகளைப் போன்றும் பார்க்கப்படுகின்றனர். சூழல் பாதுகாப்பு தொடர்பில் கருத்து வெளியிடுபவர்களின் குரலை முடக்க முடியாது. அத்துடன் நாட்டு மக்களின் உயிருக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையிலான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதையும் அனுமதிக்க முடியாது. இது போன்ற பாரதூரமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் போது அரசு அவற்றை மறைப்பதற்கு ஏன் முயற்சிக்கிறது. இவ்வாறான செயற்பாடுகளை மக்கள் போராட்டத்தின் ஊடாகவே தடுக்க முடியும். எனவே அத்தகைய போராட்டத்தில் எம்முடன் இணையுமாறு அழைப்பு விடுக்கின்றோம்- என்றார். (க-இ)

# மஹிந்தோதய திட்ட ஆய்வுகூடம் சேதம்

## சீரமைக்குமாறு கோரிக்கை

அம்பாறை,மார்ச் 29
மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்த காலத்தில், மஹிந்தோதயத் திட்டத்தின் மூலம் அமைக்கப்பட்ட திருக்கோவில் விநாயகபுரம் மகா வித்தியாலயத்தின் ஆய்வுகூடம் தீக்கிரையாகியுள்ளது. அதனைச் சீரமைக்குமாறு ஜனநாயக இளைஞர் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.
2015 ஆம் ஆண்டு இடம்பெற்ற திடீர் தீ விபத்தால் இந்த ஆய்வுகூடம் தீக்கிரையாக்கப்பட்டது. பல பெறுமதியான பொருள்கள் தீயில் கருகின. கடந்த நல்லாட்சி அரசால் ஆய்வுகூடத்தைப் புனரமைத்து மாணவர்களுக்கு வழங்க எந்த முயற்சியும் மேற்கொள்ளப்பட வில்லை.
எனவே தற்போது மஹிந்த ராஜபக்சவைப் பிரதமராகக் கொண்டு ஆட்சி நிலவுவதால், ஆய்வுகூடத்தைச் சீரமைப்பது இலகுவானது. அதனை விரைவில் சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (க-13)

# வாகனத்தில் சடலம் மீட்பு

கொழும்பு,மார்ச் 29
வாகனத்தின் சாரதி இருக்கையிலிருந்து சடலமொன்று மீட்கப்பட்டது.
சிலாபம் புத்தளம் பிரதான வீதியில் பல்பொருள் அங்காடியொன்றின் வாகன நிறுத்துமிடத்தில் நிறுத்தப்பட்டி ருந்த வாகனத்திலிருந்தே சடலம் மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
கண்டி, அம்பிட்டியப் பகுதியைச் சேர்ந்த 66 வயதான நபரது சடலம் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது. (க-இ)

# கொரோனாவின் பிடியில் பொலிஸ் பொறுப்பதிகாரி

கொழும்பு, மார்ச் 29
மட்டக்குளி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளார்.
காய்ச்சலால் நாரஹென்பிட்டி பொலிஸ் மருத்துவமனையில் அவர் சேர்க்கப்பட்டிருந்தார். அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் அவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (வ-இ)

# நெல் உற்பத்தி தாராளம் அரிசி விலை எகிறாது

## அமைச்சர் மஹிந்தானந்த உறுதி



கொழும்பு,மார்ச் 29
நாட்டில் எதிர்பார்த்ததை விட இந்த போகத்தில் நெல் உற்பத்தி தாராளமாகக் கிடைத்துள்ளது. எனவே அரிசியின் விலையை அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்படாது என்று விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
2021 ஆம் ஆண்டில் மூன்று இலட்சம் மெற்றிக் தொன் அரிசியும், 5 லட்சம் மெற்றிக் தொன் நெல்லும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. அவ்வாறிருக்கும் போது நியாய விலைக்கு நுகர்வோருக்கு அரிசியைப் பெற்றுக்கொடுக்க முடியும். எம்மிடம் தற்போது 50 ஆயிரம் மெற்றின் தொன் நெல் உள்ளது. 2 மில்லியன் மெற்றிக் தொன் அரிசி இருப்பே தற்போதைய எமது இலக்கு. இருப்பு இலக்கை அடைந்த பின்னர் ஆலை உரிமையாளர்கள் ஆட முடியாது. நாட்டின் அரிசி விலை எம்மாலே தீர்மானிக்கப்படும்- என்றார். (க-இ)

# இந்தியா - இலங்கை மோதல் மயிரிழையில் தவிர்க்கப்பட்டது

## ஆங்கில ஊடகம் சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 29
இந்திய மீனவர்களைக் கைது செய்ததன் மூலம் இந்தியாவுடன் ஏற்படவிருந்த இராஜதந்திர மோதலை இலங்கை மயிரிழையில் தவிர்த்துக்கொண்டுள்ளது என ஆங்கில ஊடகம் ஒன்று சுட்டிக்காட்டி தகவல் வெளியிட்டுள்ளது.
அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,
ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இந்தியா எடுத்த நிலைப்பாட்டுக்கு பதில் நடவடிக்கையாகவே இந்த கைது நடவடிக்கை இடம்பெற்றது என இராஜதந்திர வட்டாரங்கள் கருதுகின்றன. இந்தியா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு ஆதரவளிக்கும் என இலங்கையின் வெளிவிவகார செயலாளர் தெரிவித்திருந்த போதிலும், இந்தியா வாக்களிப்பைத் தவிர்த்ததுடன் பிரிட்டன் தலைமையிலான நாடுகளின் தீர்மானத்துக்குத் தனது ஆதரவை வெளியிட்டது. இந்த வாக்கெடுப்பு முடிவடைந்த மறுநாள் ஸ்ரீலங்கா கடற்படையினர் இந்திய மீனவர்களைக் கைதுசெய்தனர். 2014 ஜூன் மாதத்துக்கு பின்னர் அதிகளவான மீனவர்கள் கைதுசெய்யப்பட்ட சம்பவமாக இது உள்ளது.
இந்தச் சம்பவம் பிரதமர் நரேந்திர மோடியின் பாஜக கடும் சவாலை எதிர்கொண்டுள்ள தமிழகத்தில் எதிர்ப்புகளை உருவாக்கியுள்ளது. இந்த கைதுகள் இந்தியாவுடன் பகைமையை வெளிப்படுத்தும் நடவடிக்கை என இந்திய வெளிவிவகார அமைச்சக அதிகாரிகள் தெளிவாகத் தெரிவித்துள்ளனர். இந்தியா தனது அதிருப்தியை இலங்கையிடம் தெரிவித்ததைத் தொடர்ந்து உள்ளூர் அதிகாரிகள் பாதிப்பை சரிசெய்வதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டனர். எனினும் இந்த விவகாரத்தை கடற்படையுடன் இணைந்து நேரடியாக கையாளும் யாழ்ப்பாண அதிகாரிகள் தமிழக மீனவர்களை விடுதலை செய்வதற்கு தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். 40 பேரை மாத்திரம் விடுதலை செய்ய இணங்கிய அவர்கள் 14 பேரையும் அவர்களது படகுகளையும் தடுத்துவைக்கத் தீர்மானித்தனர். தமிழக மீனவர்கள் கைது தேர்தல் பிரசாரமாக மாற்றமடைவதைத் தவிர்ப்பது தொடர்பில் கவனமாக உள்ள புதுடில்லிக்கு 14 மீனவர்கள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டது கடும் அதிருப்தியை ஏற்படுத்தியது. உயர்மட்ட தலையீடுகளை தொடர்ந்து கடந்த சனிக்கிழமை 14 மீனவர்களையும் அவர்களது படகுகளையும் நீதிவான் விடுவித்துள்ளார். இந்தியாவில் கொரோனா வேகமாக பரவிவரும் இந்த தருணத்தில், கொரோனா வைரஸ் பரவலைத் தவிர்ப்பதற்காக தமிழக மீனவர்களை விடுதலை செய்யவேண்டும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதனால் இந்தியாவுடனான பனிப்போரை இலங்கை இராஜதந்திர ரீதியில் தவிர்த்துக்கொண்டுள்ளது என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)

# லெஜன்ட்ஸ் கிரிக்கெட்டில் தனிக் கொத்தணியா?

## யூசப் பதானுக்கும் தொற்று

புதுடெல்லி, மார்ச் 29
லெஜன்ட்ஸ் கிரிக்கெட்டில் தனியான கொரோனா கொத்தணி உருவாகியுள்ளதா? என்ற அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.
முன்னாள் கிரிக்கெட் வீரர்களின் லெஜன்ட்ஸ் கிரிக்கெட் அண்மையில் இடம்பெற்றது. இதில் இந்தியா சம்பியனானது.
இந்தியாவுடன் இலங்கை அணி இறுதியாட்டத்தில் விளையாடியது. இந்தத் தொடரில் இந்திய அணிக்குத் தலைமை தாங்கிய சச்சினுக்கு நேற்றுமுன்தினம் கொரோனா உறுதிப்படுத்தப்பட்டிருந்த நிலையில், தொடரில் பங்கெடுத்த மற்றொரு வீரரான யூசப் பதானுக்கும் நேற்றுத் தொற்று உறுதிப்படுத்தப்பட் டுள்ளது.
தொற்றுக்குள்ளான வீரர்களுடன் மிக அண்மையில்தான் இலங்கை அணியின் வீரர்கள் தொடரில் இருந்தார்கள். இதனால் லெஜன்ட்ஸ் கிரிக்கெட்டில் தனிக்கொத்தணி உருவெடுத்துள்ளதா என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய நாள்

**மேஷம்:** முயற்சிகளில் ஓரளவுக்காவது அனுகூலம் உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். நட்பு வட்டம் விரியும்.

**இடபம்:** பிள்ளைகளின் உதவிகள் கிடைத்து நெகிழ வைக்கும். வீடு கட்டுவதற்கான துவக்க வேலைகளை தொடங்குவீர்கள். வரவேண்டிய பணம் அசல், வட்டியுடன் வசூலாகும்.

**மிதுனம்:** குழந்தைப் பாக்கியம் எதிர்பார்த்தவர்கள் மகிழ்வீர்கள். சுபநிகழ்ச்சிகளுக்கான ஏற்பாடுகளை இன்று செய்வீர்கள். குடும்ப நலம் கூடும். மனநிறைவு உண்டு.

**கடகம்:** வயிறு சம்பந்தமான பிரச்னையைத் தவிர்க்க கவனமாக இருங்கள். கொடுக்கல் வாங்கலில் எதிர்பார்த்த லாபத்தைப் பெற முடியும். எதிர்பார்ப்புகள் அதிகரிக்கும். பெருமிதம் ஏற்படும்.

**சிம்மம்:** வாரக்கடைசியில் மகிழ்ச்சி அதிகரிக்கும். பிறருக்கு உதவுவீர்கள். உங்களின் வழி காட்டிகளுக்கும் மரியாதை செய்யுங்கள். திட்டமிட்ட விஷயத்தில் சிறு சிறு மாற்றம் ஏற்படும்.

**கன்னி:** திட்டமிட்ட விஷயங்களை முடிக்க முடியாமல் போகலாம். கடன் வாங்கும் சூழ்நிலை ஏற்பட்டாலும் வாங்காமல் சமாளிப்பீர்கள். வியாபாரத்தில் விற்பனை சற்று குறைவாகத் தான் இருக்கும்.

**துலாம்:** நண்பர்களின் உதவிகரமான செயல் மனம் நெகிழ வைக்கும். சொத்து விஷயங்களில் சிந்தித்து செயல்படுவது நல்லது. மனதில் திருப்தி நிலவும். வாகனப் பிரச்சினை தீரும்.

**விருச்சிகம் :** உற்றார் உறவினர்கள் ஓரளவுக்கு அனுகூலமாக இருப்பார்கள். பூர்வீக சொத்துகளில் முறையான தனலாபம் கிடைக்கும். முன்பிருந்த சோர்வு நீங்கி உற்சாகமாகக் களம் இறங்குவீர்கள்.

**தனுசு:** பணியிடத்தில் இருந்த குழப்பம் தீர்ந்து தெளிவு பிறக்கும். அதிர்ஷ்டமான நாள். புதிய பொருள் ஒன்று வந்து சேரும். புதிய வேலை பற்றிய தகவல் கிடைக்கும். நிம்மதி மீளும்.

**மகரம்:** பிறரை நம்பி பெரிய தொகையைத் தர வேண்டாம். பணியிடத்தில் வம்பு பேசாமல் வேலையில் கவனம் செலுத்துங்கள். உடன்பிறந்தோர் உறுதுணையாக இருப்பர். நிதி நிலை உயரும்.

**கும்பம்:** கடனுதவிகள் கிடைக்கும். புதிய நண்பர்கள் சேருவார்கள். வெளிநாட்டுத் தொடர்புடைய வாய்ப்புகள் கிடைக்கும். குடும்பத்தினரின் ஒத்துழைப்பு காரணமாக வெற்றி உண்டு.

**மீனம்:** கடனுதவிகள் கிடைக்கும். புதிய நண்பர்கள் சேருவார்கள். வெளிநாட்டு தொடர்புடைய வாய்ப்புகள் கிடைக்கும். குடும்பத்தினரின் ஒத்துழைப்பு காரணமாக வெற்றி உண்டு.

## சுடோக்கு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | 5 | 1 |
| 4 | | 6 | 5 | | 2 | | | 8 |
| | | 8 | | | | | | |
| | | | | 5 | | | 9 | |
| | 8 | | | | 4 | 7 | | |
| 9 | 4 | 1 | | | | | 3 | |
| | | | 7 | | | 9 | 2 | |
| 2 | | | 9 | 4 | | | | |
| 3 | 7 | | 8 | | | | 6 | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 4 | 6 | 8 | 5 | 2 | 7 | 9 | 3 |
| 8 | 9 | 5 | 4 | 3 | 7 | 6 | 1 | 2 |
| 3 | 2 | 7 | 9 | 1 | 6 | 5 | 4 | 8 |
| 5 | 8 | 2 | 1 | 6 | 9 | 4 | 3 | 7 |
| 7 | 1 | 4 | 3 | 8 | 5 | 9 | 2 | 6 |
| 6 | 3 | 9 | 2 | 7 | 4 | 1 | 8 | 5 |
| 2 | 7 | 3 | 6 | 4 | 1 | 8 | 5 | 9 |
| 9 | 5 | 1 | 7 | 2 | 8 | 3 | 6 | 4 |
| 4 | 6 | 8 | 5 | 9 | 3 | 2 | 7 | 1 |

**விதி1:** ஒன்பது சிறு கட்டங்கள் அடங்கிய ஒவ்வொரு சதுர அறையிலும் 1 முதல் 9 வரையுள்ள எல்லா எண்க ளும் ஒரே ஒரு முறை மட்டுமே வருமாறு அமைக்க வேண்டும். இப்படியாக இதே விதி அமையுமாறு சட்டகத்திலே உள்ள எல்லா அறைகளும் (9 அறைகள்) அமைய வேண்டும்.

**விதி2:** சட்டகம் முழுவதிலும் ஒவ்வொரு வரிசையிலும் (கிடையிலும்) எண்கள் 1 முதல் 9 வரையில் உள்ள எண்கள் ஒருமுறை மட்டுமே வருமாறு அமைக்க வேண்டும். இதே போல ஒவ்வொரு நெடையிலும் எண்கள் 1 முதல் 9 வரை ஒரே ஒரு முறை மட்டுமே வருமாறு அமைக்க வேண்டும்.

# இனவாதம் தொடருமாயின் பின்னால் வருத்தப்படுவீர்கள்

## காவிந்த எம்.பி.எச்சரிக்கை



**கொழும்பு,மார்ச் 29**

**தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் மீது முன்னெடுக்கப்படும் இனவாதச் செயற்பாடுகள் தொடருமாயின், நாடு பெரும் விளைவுகளைப் பின்னால் சந்திக்க நேரிடும். ஜனநாயகக் கொள்கைக்கு முரணாகச் செயற்படும் நாட்டை சர்வதேசம் புறக்கணிக்கும் என்பதை அரசு புரிந்துகொள்ள வேண்டும்.**

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

நாட்டின் ஆட்சி முறைமையை அடிப்படையாகக் கொண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை ஒரு நாட்டை அங்கீகரிக்கும். அந்த வகையில் இலங்கை ஜனநாயக நாடு என்ற நிலைப்பாட்டில் அங்கிகரிக்கப்பட்டுள்ளது.

ஜனநாயக கொள்கைக்கு முரணாகச் செயற்படும் போது, சர்வதேசம் கேள்வி எழுப்பும்.

இதற்கு பதிலளிக்க வேண்டியது ஆட்சியில் உள்ள அரசின் பொறுப்பாகும். இறையாண்மை என்பதைக் கூறி சர்வதேசத்தை வெறுக்க முடியாது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட பிரேரணை பல விடயங்களை உணர்த்தியுள்ளது. ஆனால் பிரேரணையில் இறுதிக் கட்டப் போரில் இடம்பெற்றன எனக் குறிப்பிடப்படும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படவில்லை. மாறாக கடந்த ஒன்றரை வருட காலப்பகுதியில் இடம்பெற்ற மனித உரிமை மீறல் செயற்பாடுகள் குறித்து அதிகளவு அவதானம் செலுத்தப்பட்டுள்ளன.

கொவிட்19 வைரஸ் தாக்கத்தினால் உயிரிழந்த முஸ்லிம் சமூகத்தினரது ஜனாஸாக்கள் பலவந்தமான முறையில் தகனம் செய்தல், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தை இலக்காகக் கொண்டு தொல்பொருள் அகழ்வாராய்ச்சி, தமிழ் சமூகத்தினர் மீது வெறுப்பூட்டும் பேச்சுக்கள் ஆகியவற்றை பிரதானமாகக் குறிப்பிட வேண்டும்.

எனவே குறுகிய அரசியல் நோக்குடன் தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகத்தின் மீது தொடரும் அடக்குமுறைகளைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். என்றார். (கு-இ)

# வி.புலிகள் அமைப்பில் பிள்ளையான் குபேரனாம்

கொழும்பு, மார்ச் 29

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்த போது தனக்கு குபேரன் என்றே பெயர் வைக்கப்பட்டது என நாடாளுமன்ற உறுப்பினருமான சி. சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

அதன்பின்னரே, தன்னை விடுதலைப் புலிகள், பிள்ளையான் என அழைத்தனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். தனியார் வானொலி நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார். (வ-இ)

# நுகர்வுக்கு தகுதியற்ற பொருள்கள் பறிமுதல்

பெலவத்த பகுதியில், மனித நுகர்வுக்குத் தகுதியற்ற பதார்த்தங்கள் அடங்கிய ஒரு தொகை உணவுப்பொருள்கள் சுகாதாரப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டன. மனித நுகர்வுக்குத் தகுதியற்ற வகையில் தயாரிக்கப்பட்டு, சந்தைப்படுத்தத் தயாராக இருந்தபோது, குறித்த பொருள்கள் கைப்பற்றப்பட்டன.

ஐஸ்கிரீம், தயிர் மற்றும் சாக்லேட் வெண்ணெய் உள்ளிட்ட உணவுப் பொருள்களே கைப்பற்றப்பட்டன என்று பெலவத்த பொதுச் சுகாதார ஆய்வாளர் கே.கே.ஏ மதுஜித் தெரிவித்தார்.

கைப்பற்றப்பட்ட உணவுகளில் நுண்ணுயிரிகள் இருப்பதுடன், அவை சரியான வெப்பநிலையில் சேமிக்கப்பட்டிருக்கவில்லை. அவற்றின் பெறுமதி 6 லட்சம் ரூபா என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனங்கள் வேறுபட்டாலும் அனைவருக்கும் தாய்நாடு

## உரிமைகளை நசுக்காதீர் என்கிறது மக்கள் சக்தி அமைப்பு

கொழும்பு, மார்ச் 29

**ஒருவர் இந்த நாட்டில் பிறந்திருந்தால், அவர் தமிழரா? முஸ்லிமா? அல்லது சிங்களவரா? என்பது முக்கியமல்ல. இந்த நாடு அவரது தாய் நாடாக இருக்க வேண்டும். அவர் இந்த நாட்டில் பிறந்திருந்தால், அவரது தாய்நாடு இந்த நாடு.**

எனவே உரிமைகளைப் பறிக்கும் அரசின் நடவடிக்கைகளுக்கு எதிராக எதிர்காலத்தில் சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகத்தை ஒன்றிணைத்து குரல் எழுப்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு மக்கள் சக்தி அமைப்பின் ஏற்பாட்டாளர் சுதேஷ் நந்திமல் தெரிவித்தார்.

"இலங்கை தேசத்தின் நீதி, நேர்மைக்காக மக்களின் போராட்டம்" என்ற தொனிப்பொருளில் கொழும்பில் இடம்பெற்ற போராட்டத்தின்போது ஊடகங்களுக்கு அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில், மக்களுக்கு எதிராக அல்ல. நாட்டின் ஆட்சியாளர்களுக்கு எதிராகவே தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்த ஆட்சியாளர்களின் நடவடிக்கைகளால் நாட்டு மக்களின் உரிமைகள் மற்றும் பிரஜைகளின் மனித உரிமைகள் போன்ற அனைத்தும் மீறப்பட்டன.

இந்த நாட்டில் ஒடுக்கப்பட்ட வர்க்கம் தற்போது பெரும் நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றது. எதிர்காலத்தில் இந்த நாட்டு மக்களுக்கு வாழ்வதற்கான உரிமை கூட கிடைக்குமா என்ற சந்தேகமும் ஏற்பட்டுள்ளது.

நாட்டின் வன வளங்களை அழிப்பதன் மூலமும், விலங்குகள் கூட வாழ முடியாத சூழலை உருவாக்குவதன் மூலமும் பழங்குடி மக்களின் முழு வாழ்க்கை முறையையும் மாற்ற அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இலங்கையில் வாழும் பல்வேறு இனத்தவர்களுக்கு தமது கலாச்சாரத்தைப் பாதுகாக்க முடியவில்லை. ஆனால் இனவாதம் மற்றும் மதவாதத்தின் ஊடாகவே ஆட்சிக்கு வந்தோம் என்பதை அரசு மறந்து விட்டது. -என்றார். (க-இ)

பசறை விபத்து;

# 3 பிள்ளைகளையும் பொறுப்பேற்க மருத்துவ நிபுணர் வஜிர தயார்!

பசறை, மார்ச் 29

பசறை விபத்தில் பெற்றோர்களை இழந்த மூன்று பிள்ளைகளையும் பொறுப்பேற்க, நான் தயாராக இருக்கின்றேன் என்று அம்பாறை அரசாங்க மருத்துவமனை மருத்துவ நிபுணர் வஜிர ராஜபக்ச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

மூன்று பிள்ளைகளையும் அப் பிள்ளைகளின் பாதுகாவலர்கள் என்னிடம் ஒப்படைக்க விருப்பம் தெரிவிப்பார்களேயானால், அதற்குரிய நடவடிக்கைகளை நான் மேற்கொள்வேன். இம் மூன்று பிள்ளைகளையும் இணைத்துக்கொண்டு, எனது குடும்பத்தை பெரிதாக்கவே விரும்புகின்றேன்.

இப் பிள்ளைகள் மூவரது வருகையை எனது குடும்பத்தினர் மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்துள்ளனர்.

இப் பிள்ளைகளை விரைவில் சந்திக்கவுள்ளேன். மனிதாபிமான முறையிலேயே நான் செயற்படுகின்றேன். இன, மதம், ஜாதி எதையும் நான் பார்க்கவில்லை. இப் பிள்ளைகளை பிரிக்க நினைக்கவில்லை. மூன்று பேரையும் ஒன்றாக வளர்க்கவே விரும்புகின்றேன்.

அப்பிள்ளைகள் தனது பாட்டியை விட்டு வர விரும்பாத பட்சத்தில், அவர்கள் பெரியவர்களாகும் வரை, அவர்களுக்கான உதவிகளை வழங்க எதிர்பார்க்கின்றேன் -என்றார். (ரு-இ)

# பண்டிகைக் காலத்தில் மக்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துக!

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 29

எதிர்வரும் பண்டிகைக் காலங்களில், கொவிட்-19 பரவலைத் தடுப்பதற்கு மக்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவது குறித்து, அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

பண்டிகைக் காலத்தில், பொதுமக்கள் ஒன்றுகூடுகின்றமை காரணமாக, நாட்டில் கொவிட் பரவல் மீளவும் அதிகரிக்கும் அபாயம் உள்ளது என அந்த சங்கத்தின் ஊடகப் பேச்சாளர், மருத்துவர் சமந்த ஆனந்த தெரிவித்துள்ளார்.

எனவே, பொதுமக்களும் மிகவும் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ரு-இ)



அனைத்து முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் தொழிற்சங்கத்தின் முப்பெரும் விழாவில், தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தகுதி பெற்ற முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களின் பிள்ளைகள், சேவையிலிருந்து ஓய்வு பெற்ற முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் பதவி உயர்வு பெற்ற உத்தியோகத்தர்கள் ஆகியோரைக் கௌரவிக்கும் நிகழ்வு மட்டக்களப்பு மாநகர சபையின் நகர மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. (க-150)

# ரஷ்யத் தூதுவருடன் குணரத்ன சந்திப்பு

கொழும்பு,மார்ச் 29

இலங்கைக்கான ரஷ்யத் தூதுவர் யூரி மேட்டரி, பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு பாதுகாப்பு அமைச்சில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

சந்திப்பில் பாதுகாப்புச் செயலாளர் மற்றும் ரஷ்யத் தூதுவர் ஆகியோருக்கிடையில் இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்த, இலங்கைக்குத் தொடர்ச்சியாக ஆதரவளித்து வந்தமைக்காக ரஷ்யாவுக்கு, பாதுகாப்புச் செயலாளர் நன்றி தெரிவித்தார்.

சந்திப்பில் ரஷ்யத் தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகர் கேர்ணல் டெனில் ஐ ஷ்கோடா மற்றும் பாதுகாப்பு அமைச்சின் பாதுகாப்பு பிரிவுக்கான மேலதிக செயலாளர் நோனிஸ் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-இ)

# சட்டம், நிர்வாகக் கட்டமைப்புமீது அழுத்தம் பிரயோகிக்க இயலாது

## சாலிய பீரிஸ் தெரிவிப்பு

கொழும்பு,மார்ச் 29

சட்டம் மற்றும் நீதி நிர்வாகக் கட்டமைப்புமீது, அழுத்தங்கள் பிரயோகிக்கப்படும்போதும், அவை அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகப்படும்போதும் நாம் அதனைப் பாதுகாப்பதற்காக முன்நின்று செயற்படுவோம்.

இவ்வாறு இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் புதிய தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் தெரிவித்தார்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் உறுப்பினர்கள் உத்தியோகபூர்வமாகப் பதவியேற்கும் நிகழ்வும், முதலாவது கூட்டமும் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை, கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றன.

நிகழ்வில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத் தேர்தல் வரலாற்றிலேயே இம்முறைதான் அதிகளவான வாக்குகள் பதிவாகியுள்ளன.

புதிதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள சட்டத்தரணிகள், சங்க உறுப்பினர்களுடன் ஒன்றிணைந்து செயற்படுவதற்குத் தயாராக உள்ளேன்.

சட்டத்தரணிகள் சங்கத்தின் சுயாதீனத்தன்மை, நீதித்துறையின் சுயாதீனத்துவத்துக்கு இன்றியமையாததாகும். அதேபோன்று சட்டத்தரணிகள் சங்கத்தின் தீர்மானங்கள் அதன் கொள்கைகளின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட வேண்டும்.

கருத்துச் சுதந்திரம் உள்ளடங்கலாக மக்களின் அடிப்படை உரிமைகளை உறுதிப்படுத்தும் விதமாகச் செயற்பட வேண்டும். நீதித்துறையின் சுயாதீனத் தன்மையை உறுதிசெய்வதும், விரிவுபடுத்துவதும் சட்டத்தரணிகள் சங்கத்தின் முக்கிய நோக்கமாக இருப்பதுடன், அதனை அடைந்துகொள்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

20 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், நீதிமன்றங்களுக்கான நீதிபதிகளின் நியமனம் மற்றும் அவர்களை பதவி விலக்குதல் ஆகியவற்றில் உரிய சட்டதிட்டங்களும், வெளிப்படைத்தன்மையும் கடைப்பிடிக்கப்பட வேண்டியது அவசியமாகும். -என்றார். (க-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சித்திரை வருடப்பிறப்பு காலத்தில் எங்கும் குற்றச்செயல்கள் நடக்கலாம்

## பொதுமக்களைப் பாதுகாப்பாக இருக்குமாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அவசர எச்சரிக்கை



**கொழும்பு, மார்ச் 29**

**சித்திரைப் புத்தாண்டு காலத்தில் பல குற்றச் செயல்கள் இடம்பெறுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. எனவே இவ்வாறான செயல்களில் ஈடுபடும் நபர்கள் தொடர்பில் மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் சிங்கள புதுவருடக் கொண்டாட்டங்களின்போது, திட்டமிட்ட குழுவினர் மற்றும் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையானவர்களால் பல்வேறு கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெறுவதற்கான வாய்ப்புகள் அதிகமாகக் காணப்படுகின்றன.

இத்தகைய குற்றச் செயற்பாடுகள் தற்போதும் பதிவாகி வருகின்ற நிலையில் அவை மேலும் அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன.

தங்கச் சங்கிலி, வாகனங்கள் கொள்ளை, தங்க நகை விற்பனை நிலையங்கள் மற்றும் நிதி நிலையங்களை இலக்கு வைத்து முன்னெடுக்கப்படும் கொள்ளைச் சம்பவங்கள் என்பவை அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன.

அதனால் பொதுமக்கள் இவை தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். இதன்போது வீட்டை விட்டு வெளியில் செல்லும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வீட்டின் பாதுகாப்பை உறுதிசெய்துகொள்ள வேண்டும்.

சொந்த வாகனங்களில் செல்பவர்கள், வாகனங்களை நிறுத்தி வைக்கும்போது அதன் பாதுகாப்பை உறுதிசெய்து கொள்ள வேண்டும்.

வங்கிகள் உள்ளிட்ட நிதி நிலையங்களில் பணத்தை வைப்பிலிடச் செல்பவர்கள், தங்களைச் சுற்றியுள்ளவர்கள் தொடர்பில் கவனம் செலுத்துவதுடன், தங்களிடமுள்ள பணத்தை பாதுகாப்புடன் வங்கிக்கு கொண்டுசெல்ல வேண்டும்.

இதேவேளை, வர்த்தக நிலையங்களுக்கு அருகில் காணப்படும் ஏனைய வர்த்தக நிலையங்களுடன் தொடர்பை வைத்துக் கொள்வதுடன், ஏதேனும் இடர் நிகழ்ந்தால் உடனே அதனை ஏனைய வர்த்தக நிலையங்களும் அறிந்துகொள்வதற்காக திட்டமொன்றை தயாரித்திருத்தல் வேண்டும்.

இந்தநிலையில் வர்த்தக நிலையங்கள், நிதி நிலையங்கள் மற்றும் பொதுமக்கள் இவ்வாறான நெருக்கடி நிலைமைகள் ஏற்பட்டால் அது தொடர்பில் தெரியப்படுத்துவதற்காக, அருகிலுள்ள பொலிஸ் நிலையங்களின் தொலைபேசி இலக்கம் மற்றும் அவசர அழைப்பு பிரிவின் இலக்கங்களை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். - என்றார்.

(த-இ)

# அரலிய கீரி சம்பா கொள்வனவுக்கு வர்த்தகர்களால் பல நிபந்தனைகள்



மன்னார், மார்ச் 29

மன்னார் பஸார் பகுதியிலுள்ள பல்பொருள் விற்பனை நிலையங்கள் சில வற்றில் 'அரலிய கீரி சம்பா' அரிசியைப் பெற்றுக் கொள்வதில் நாம் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றோம் என்று நுகர்வோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

'அரலிய கீரி சம்பா' அரிசி 5 கிலோ மற்றும் 10 கிலோ பொதிகள் மாத்திரமே இந்த வர்த்தக நிலையங்களில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. எனினும் குறித்த அரிசிப் பொதியை மாத்திரம் நுகர்வோர் கொள்வனவு செய்ய முடியாத நிலை காணப்படுகிறது. இந்த அரிசி பொதியை கொள்வனவு செய்வதாயின் ஆயிரம் ரூபா முதல் 2 ஆயிரம் ரூபா வரையான ஏனைய அத்தியாவசியப் பொருள்களையும் கொள்வனவு செய்ய வேண்டும் என குறித்த வர்த்தக உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர் என்று நுகர்வோர் மேலும் தெரிவித்தனர்.

எனவே மன்னார் மாவட்ட நுகர்வோர் அலுவலக அதிகாரசபை அதிகாரிகள் இது தொடர்பில் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு, இந்த வர்த்தகர்களுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று நுகர்வோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ற-56)

# விசேட பூசை

கொரோனாத் தாக்கத்திலிருந்து நாட்டு மக்கள் மீள இறை ஆசி வேண்டி இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் தென்மராட்சி மட்டுவில் வடக்கு பன்றித்தலைச்சி அம்மன் தேவஸ்தானத்தில் விசேட பூசை வழிபாடு நாளை செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. வழிபாடுகளின் நிறைவில் தேவஸ்தான பிரதம குருக்கள் கிரியாஜோதி சிவஸ்ரீ ந.மகேஸ்வரக் குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயணமும் இடம்பெறவுள்ளன.

(வ-இ)

# ஜெனிவா தீர்மானத்தால் இராஜதந்திரம் பலவீனம்

## முன்னிலை சோசலிசக் கட்சி சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 29

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தால், இலங்கை அரசின் இராஜதந்திரம் பலவீனமடைந்துள்ளது என்று வெளிப்படையாகத் தெரிகிறது. ஜெனிவா விவகாரம் தொடர்பில் அரசு முறையான நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை. ஆரம்பத்தில் இருந்து பொறுப்பற்ற வகையிலும், அடாவடித்தனமாகவும் செயற்பட்டது.

இவ்வாறு முன்னிலை சோசலிச கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

கட்சியின் ஊடகப் பேச்சாளர் புபுது ஜயகொட மேலும் தெரிவித்ததாவது,

22 நாடுகள் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தமையை அரசு மாகாண சபைத் தேர்தலின் பிரதான பரப்புரையாகப் பயன்படுத்திக் கொள்ளும். அரசின் இரட்டை வேடத்தை மக்கள் இனியாவது புரிந்து கொள்ள வேண்டும். 2019 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நாட்டில் மனித உரிமை மீறல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. சிறுபான்மை மக்கள் மாத்திரமல்ல பெரும்பான்மை சமூகம்கூட பாதிக்கப்பட்டுள்ளன. கொவிட்19 வைரஸ் விவகாரத்தைக் கொண்டு அரசு இனங்களுக்கு மத்தியில் அநாவசியப் பிரச்சினைகளைத் தோற்றுவித்தது.

ஜெனிவா விவகாரத்தில் தோல்வியடைக் காரணமான தவறை அரசு ஒருபோதும் திருத்திக் கொள்ளப் போவதில்லை. சர்வதேசத்துக்கு அடிபணியத் தேவையில்லை என்று அரசியல்வாதிகள் குறிப்பிடுவது வெறும் தேர்தல் பரப்புரையாகும். -என்றார்.

(க-இ)

# கனரக வாகனங்களால் வீதிகளுக்கு பாதிப்பு!

## வீதியை புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 29

கனரக வாகனங்களின் அதிவேக போக்குவரத்தால் கைதடி நவீல்ட் வீதியிலிருந்து கோப்பாய் வீதிக்கு செல்லும் இரு வீதிகளும் பாவனை செய்ய முடியாதளவுக்கு மிகவும் சேதமடைந்து வருகின்றன என்று அந்தப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த வீதி வடக்கு மாகாண சபையின் அலுவலகங்கள் அமைக்கப்பட்ட போது இந்த வீதிகள் காப்பெற் வீதிகளாக மாற்றப்பட்டு மக்கள் பாவனைக்கு விடப்பட்டிருந்தன. சட்ட விரோத மணல் ஏற்றிச் செல்லும் கன்ரர் வாகனங்கள் இந்த வீதியூடாக பயணிப்பதாலேயே இந்த காப்பெற் வீதிகள் சேதமடைந்து வருகின்றன.

இந்த வீதியால் விழிப்புலனிழந்த பலர் தினமும் பயணம் செய்வதால் வேகமாக வரும் வாகனங்களால் விபத்துக்கள் ஏற்படும் நிலையும் உள்ளது.

இது தொடர்பில் கனரக வாகனங்களின் சாரதிஅவர்களிடம் நியாயம் கேட்கச் சென்றால் இரும்புக் கம்பிகளைக் காட்டி தம்மை அச்சுறுத்துகின்றனர் என்று அந்தப் பகுதி மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, போக்குவரத்துப் பொலிஸார் இந்த வீதியில் கடமையிலிருக்கும் நேரங்களில் கூட இந்த வாகனங்கள் இந்த வீதியால் பயணிப்பதையும் நாம் காண்கின்றோம்.

எனவே, இவ்விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாகக் கவனமெடுத்து இந்த வீதியால் பயணிக்கும் கனரக வாகனங்களைத் தடுத்து நிறுத்துவதுடன் இவ்வீதியை விழிப்புலனிழந்த மாணவர்களின் நலன்கருதி திருத்தம் செய்துதருமாறும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

(ற-288)

# ஈழத்துச் சிதம்பர தேர்த் திருவிழா

காரைநகர் ஈழத்துச் சிதம்பர வருடாந்த மகோற்சவத் தேர்த் திருவிழா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. வழமைபோன்று பஞ்சரத பவனி இடம்பெறாது பஞ்ச மூர்த்திகள் ஒரு தேரிலே ஆரோகணித்து அடியவர்களுக்குக் காட்சி கொடுத்தனர். கொரோனா கட்டுப்பாட்டால் குறைந்தளவு பக்தர்களே கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

(வ-250)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவின் கடன் தந்திரத்தை இலங்கையால் அறிந்தோம்

## பங்களாதேஷ் முக்கியஸ்தர் ரிஸ்வி தெரிவிப்பு

**கொழும்பு,மார்ச் 29**


**சீனா தனது 'கடன்பொறி' மூலோபாயத்தைப் பயன்படுத்தி அபிவிருத்தியடைந்து வருகின்ற மற்றும் அபிவிருத்தியடையாத நாடுகளைக் கவர்ந்திழுக்கும் தந்திரத்தை இலங்கையிடம் இருந்து கற்றுக் கொண்டோம். அதனால் சீனாவுடனான தொடர்புகளின்போது முதலீட்டுக்கொள்கையைச் சரியாகப் பின்பற்றுகின்றோம்.**

இவ்வாறு பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனாவின் வெளிவிவகார ஆலோசகர் கௌஹர் ரிஸ்வி தெரிவித்தார்.

இது தொடர்பில் சர்வதேச ஆங்கில ஊடகமொன்று வெளியிட்டுள்ள செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை மற்றும் கிழக்கு ஆபிரிக்க நாடான ஜிபோட்ரி போன்ற நாடுகள் சீனாவிடம் பெற்ற கடனை மீளச் செலுத்துவதற்கான ஆற்றலை இழந்துள்ளமையால், அவற்றின் சொத்துக்கள் மீதான கட்டுப்பாட்டை சீனாவுக்கு வழங்குவதற்கு நிர்பந்திக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து எமது நாடு பாடம் கற்றுக்கொண்டது. சீனாவிடம் ஜிபோட்ரி பெற்ற கடனின் பெறுமதி, அந்த நாட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 70 சதவீதமானவற்றையும் விட அதிகமாகும் என்று அறிக்கைகள் குறிப்பிடுகின்றன. அதனால் எமது நாட்டின் இறையாண்மையை எவ்வாறு பாதுகாக்க வேண்டும் என்பதை நாம் நன்கு அறிந்துள்ளோம். விடுதலையை இலக்காகக் கொண்ட போராட்டத்தின் ஊடாக நாம் தற்போது சுதந்திர நாடாக மாற்றியமைந்துள்ளோம்.

ஆகவே எமது பெறுவனவுகளை சரிவரக் கண்காணிக்கும் அதே வேளை, வெளிநாடுகளிடமிருந்து பெறும் கடன்களை மீளச்செலுத்தக்கூடிய எமது ஆற்றல் தொடர்பிலும் மிகுந்த அவதானத்துடன் இருக்கின்றோம்' என்று ஆலோசகர் ரிஸ்வி குறிப்பிட்டுள்ளார். -என்றுள்ளது. (க-இ)



# கொரோனாவால் உயிரிழப்பு 559

கொழும்பு,மார்ச் 29

நாட்டில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 559 ஆக அதிகரித்துள்ளது.

கொழும்பு-6 வெள்ளவத்தைப் பகுதியைச் சேர்ந்த 82 வயதான ஆண்ணொருவரின் உயிரிழப்பு இறுதியாகப் பதிவாகியுள்ளது.

கொரோனா, நியூமோனியா தொற்று மற்றும் இருதய நோய் நிலைமையே அவரது இறப்புக்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, நாட்டில் கொவிட் தொற்றுக்குள்ளானோர் எண்ணிக்கை 91 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

இனங்காணப்பட்ட தொற்றாளர்களில் 88 ஆயிரத்து 388 பேர் குணமடைந்துள்ளனர். 2 ஆயிரத்து 778 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதேவேளை 8 லட்சத்து 84,164 பேருக்குத் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது. (க-இ)



*மாணிக்கக்கல்*

# சுரங்கத்தில் சிக்கி இருவர் உயிரிழப்பு

கொழும்பு, மார்ச் 29

அவிசாவளை பொலிஸ் பிரிவின் வெரலுபிடிய பிரதேசத்தில் மாணிக்கக்கல் சுரங்கத்தில் சிக்கி இருவர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

நிலவிய கடும் மழை காரணமாக சுரங்கத்தினுள் மின் தடை ஏற்பட்டுள்ளதை அடுத்து, சுரங்கத்துக்கு சென்றிருந்த இருவர் சுரங்கத்தினுள் சிக்கி உயிரிழந்தனர்.

இந்த இரு சடலங்களும் தற்போது அவிசாவளை மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளன என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-இ)

# இலங்கையிலுள்ள இந்தியர்கள் வாக்களிக்க வசதி ஏற்படுத்துக

## இ.தொ.கா.கோரிக்கை

கொழும்பு,மார்ச் 29

இலங்கையிலுள்ள இந்தியப் பிரஜைகள், இங்கிருந்தவாறே, தேர்தலில் வாக்களிப்பதற்கான வசதிகளை, இந்தியத் தூதரகம் ஏற்படுத்த வேண்டும் என்று இ.தொ.காவின் உதவிச்செயலாளர் டி.வி. சென்னன் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொரோனாத் தொற்றால் எதிர்வரும் 6 ஆம் திகதி நடைபெறும் தமிழகத் தேர்தலில், இலங்கையிலுள்ள இந்தியப் பிரஜைகளால் வாக்களிக்க முடியாத சூழல் உருவாகியுள்ளது.

தேர்தல்களில் வாக்களிப்பதற்கான இரட்டைப் பிரஜாவுரிமை பெற்றவர்கள், தமிழக வர்த்தகர்கள், இலங்கையில் பல்வேறு துறைகளிலும் தொழில்செய்து வருவோர் மற்றும் தமிழக மீனவர்கள் எனப் பலர் தற்போது இலங்கையில் உள்ளனர்.

இவர்கள் வசித்து வரும் பகுதிகள் மற்றும் சிறைக்கூடங்களில் வாக்களிக்கும் பெட்டிகள் வைக்கப்படல் வேண்டும். தேர்தல் சட்ட விதிகளுக்கமைய தேர்தலை நடத்தி, அவற்றை தமிழக தேர்தல் திணைக்களத்துக்கு அனுப்ப வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (க-இ)

*சுற்றாடலைப் பாதுகாக்க*

# அரச அதிகாரிகளால் புதிய கூட்டணி அமைப்பு

கொழும்பு, மார்ச் 29

சுற்றாடல் பிரச்சினைகளின்போது நேரடியாக தலையிடும் அரச அதிகாரிகள் சுற்றாடலுக்கான அரச ஊழியர் தொழிற்சங்க ஒன்றியமாக நேற்று புதிய கூட்டணி ஒன்றை அமைத்துள்ளனர்.

தெஹிவளை - அத்திடிய இயற்கை வள கேந்திரத்தில் ஒன்றுகூடிய மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சுற்றாடல் அதிகாரிகள் சங்கம், வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் பட்டதாரிகள் ஒன்றியம் மற்றும் வனவள பாதுகாப்புத் திணைக்களத்தின் அகில இலங்கை வன அதிகாரிகள் சங்கம் ஆகிய தொழிற்சங்கங்கள் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளன. (ச-இ)

# வாகன விபத்தில் 2 பெண்கள் சாவு

கொழும்பு, மார்ச் 29

யாழ். - கண்டி ஏ-9 வீதியின் திறப்பனை பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இரண்டு பெண்கள் உயிரிழந்துள்ளனர்.

பக்கமூன பகுதியிலிருந்து அநுராதபுரத்துக்கு யாத்திரை சென்ற வான் ஒன்று வீதியை விட்டு விலகி மரமொன்றுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் விபத்தில் காயமடைந்தவர்கள் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# வவு. ஓடவெளிக் குளத்தின் நிர்மாணப்பணி ஆரம்பம்

வவுனியா ஒலுமடு கிராம சேவகர் பிரிவிலுள்ள ஓடவெளி குளத்தின் புனர்நிர்மாணப்பணிகள் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் தலைமையில் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நீர்ப்பாசன செழுமைத் திட்டத்தின் 5 ஆயிரம் சிறிய குளங்களை புனர்நிர்மாணம் செய்யும் வேலைத் திட்டத்தின் கீழ், இந்தக் குளம் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

இந்த குளப் புனரமைப்புக்கு 89 லட்சத்து 13 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் குளத்தின் கீழ் மேலதிக நெற்செய்கையும் மேற்கொள்ளப்படவுள்ளது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இ.போ.ச பஸ்ஸுக்கு கல்லெறித் தாக்குதல்

## சாரதி படுகாயம்

**கொடிகாமம், மார்ச் 29**

இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேருந்துக்கு இனந்தெரியாதோரால் மேற்கொள்ளப்பட்ட கல் எறித் தாக்குதலில் குறித்த பேருந்தின் சாரதி படுகாயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு மீசாலை ஐயா கடையடியில் இடம்பெற்றது.

பழனிச்சாமி ஜோதிராஜ் (வயது-50) என்பவரே இந்த தாக்குதலில் நெற்றியில் படுகாயம் அடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-159)

# உயரம் பாய்தலில் இலங்கை வீரர் சாதனை

கொழும்பு,மார்ச் 29
அமெரிக்காவில் இடம்பெற்றுவரும் டெக்சாஸ் ரிலேஸ் சம்பியன் போட்டிகளில், உயரம் பாய்தலில் இலங்கை வீரர் உஷான் திவங்க சாதனை படைத்துள்ளார்.
இவர் 2.28 மீற்றர் உயரத்தைத் தாண்டி சாதனை படைத்துள்ளார்.
இதற்கு முன்னர் இலங்கை வீரர் மஞ்சுள குமார உயரம் பாய்தலில் 2.27 மீற்றர் தாண்டி சாதனை படைத்திருந்தார். அந்தச் சாதனை உஷான் திவங்க முறியடித்துள்ளார். (க-இ)

# வழக்குகளை ஒத்திவைப்பதால் நீதித்துறை மீது அவநம்பிக்கை

## நீதி அமைச்சர் அலி சப்ரி சுட்டிக்காட்டு



**கொழும்பு, மார்ச் 29**
**உலக நாடுகளில் இணையவழியில் நீதிமன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற நிலையில், இலங்கையில் தற்போது அடிக்கடி வழக்குகள் பிற்போடப்படுகின்ற நிலைமையே தொடர்கின்றது. இது நாட்டின் நீதித்துறை மீது மக்கள் நம்பிக்கையிழப்பதற்கு வழி வகுக்கும் என நீதியமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.**

2021/2022 ஆம் ஆண்டுக்கான இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் உறுப்பினர்கள் உத்தியோக பூர்வமாகப் பதவியேற்கும் நிகழ்வும் முதலாவது கூட்டமும் நேற்று சனிக்கிழமை கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.
இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
மேலும், இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பக்கச்சார்பும் அச்சமுமின்றி செயற்படும் வேளை, அதன் சுயாதீனத்தன்மை தொடர்ந்தும் பேணப்படும் என்றும் நம்புகின்றேன். நீதிமன்றத்தின் சுயாதீனத்தன்மை மற்றும் இறையாண்மை என்பவை சட்டத்தரணிகள் சங்கத்தின் சுயாதீனத்தன்மையில் தங்கியுள்ளன.
அதுமாத்திரமன்றி சட்டத்தின் ஆட்சி, நீதி நிர்வாகம், சுயாதீன நீதித்துறை, மனித உரிமைகள் மற்றும் பாதுகாப்பு ஆகிய விடயங்களிலும் சட்டத்தரணிகள் சங்கத்தின் பங்களிப்பு மிக முக்கியமானதாகும்.
எமது நாடு சர்வதேச தரம்வாய்ந்த சட்டத்தரணிகளை உருவாக்கியிருக்கிறது.
எனினும் தற்போதும் விசாரணைகள் முடிவடைந்து, தீர்ப்பு வழங்கப்படாமல் பெரும் எண்ணிக்கையான வழக்குகள் உள்ளன.
இந்த நிலைமை நாடு என்ற ரீதியில் நாம் முன்நோக்கிச் செல்வதற்கு பெரும் சவாலாக உள்ளது.
எனவே நீதிமன்ற செயற்பாடுகளை மேம்படுத்துகின்ற பொதுவான இலக்கை நோக்கி அனைவரும் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (ய)

# காங்கிரஸை பலப்படுத்த பல வேலைத்திட்டங்கள்

## ஜீவன் தொண்டமான் அறிவிப்பு



கொழும்பு.மார்ச் 29
இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் என்பது ஒரு குடும்பம். அந்தக் குடும்பத்தை பலப்படுத்த பல வேலைத்திட்டங்களை முன்னெடுப்போம் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார். இ.தொ.கா.வின் மகளிர் தின நிகழ்வுகளில் அவர் இதனைத் தெரிவித்தார்.
சௌமியமூர்த்தி தொண்டமானும், தலைவர் ஆறுமுகன் தொண்டமானும் இ.தொ.கா. என்பது ஒரு குடும்பம் என அடிக்கடி கூறுவார்கள். அந்தக் குடும்பத்தின் ஒற்றுமை சமூகத்தின் ஒற்றுமையாகும். ஊதிய உரிமையை வென்றெடுப்பதற்கான அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தின்போது, அந்த ஒற்றுமை அனைவருக்கும் தெரிந்தது. காங்கிரஸின் பலம் என்றால் என்னவென்றும் புரிந்தது.
காங்கிரஸ் என்ற குடும்பத்தில் அங்கம் வகிப்பவர்களின் வாழ்வாதாரம் மேம்பட வேண்டும். இதற்காக பல திட்டங்களை உருவாக்குவதற்கு உத்தேசித்துள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார். (க-இ)



# தொல்பொருள் அகழ்வில் இனம். மதம் இலக்கல்ல

## மறுக்கிறார் தொல்பொருள் பணிப்பாளர்

கொழும்பு,மார்ச் 29
தொல்பொருள் இடங்களைக் கண்டறிந்து அகழ்வுகள் மற்றும் பாதுகாத்தல் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் எவ்வித பாகுபாடுகளும் காட்டவில்லை. குறிப்பிட்ட இனத்தையோ, மதத்தையோ இலக்கு வைத்து எவ்விதமான முயற்சிகளையும் முன்னெடுக்கவில்லை என்று தொல்பொருளியல் திணைக்களத்தின் பணிப்பாளர் சிரேஷ்ட பேராசிரியர் அநுர மனதுங்க தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
எமது திணைக்களத்தின் பிரதான பணியாக இருப்பது இந்த நாட்டின் வரலாற்றுத் தொன்மம் வாய்ந்த பகுதிகளை அடையாளம் காணலும், முறையாகப் பாதுகாத்தலும் ஆகும். அந்தப் பகுதிகளிலிருந்து மீட்கப்படும் பொருள்களைப் பத்திரப்படுத்தி வரலாற்றுத் தொன்மங்களை அழிவுறாது பேணுவதே எமது கடமையாகின்றது. அந்தப் பணியையே நாம் முன்னெடுத்து வருகின்றோம். இதில் எவ்விதமான இன, மத ரீதியான பாகுபாடுகளும் காட்டப்படவில்லை.
தெற்கு மாகாணத்தில் எவ்வாறு புராதன பகுதிகளைப் பாதுகாப்பதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றோமோ அதேபோன்று தான் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் முன்னெடுக்கின்றோம்.
வடக்கு, கிழக்கில் காணப்பட்ட அசாதாரண நிலைமைகளால் அங்குள்ள தொல்பொருள் பகுதிகள் பாதுகாக்கப்பட்டிருக்கவில்லை. தற்போது அதற்காக விசேட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.
சில பகுதிகளில் கண்ணிவெடி அகற்றப்படாமை உள்ளிட்ட பிரச்சினைகளும் உள்ளன. எவ்வாறாயினும் வடக்கிலும், கிழக்கிலும் உள்ள தொல்பொருள்களும் இடங்களும் உரிய வகையில் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதே எமது கரிசனை ஆகும்.
கோவில்களில் தொல்பொருள்களை அடையாளப்படுத்துவதற்கான முயற்சிகள் ஒரு மதத்தை இலக்கு வைத்த நடவடிக்கை அல்ல. தென்னிலங்கையில் பௌத்த விகாரைகளுக்குள் இந்துக் கோவில்கள் உள்ளன.
எனவே தொல்பொருளியல் செயற்பாடு தொடர்பாக தவறான புரிதலை வடக்கு, கிழக்கு சமூகத்தினர் விடுக்க வேண்டும். என்றார்.
வடக்கு மாகாணத்தில் அண்மைய நாள்களில் தொல்பொருளியல் அதிகாரிகள் கிளிநொச்சி உருத்திரபுரம் சிவன் கோவில் மற்றும் நீர்வேலி நிலாவரைப் பகுதி உள்ளிட்ட பகுதிகளில் தொல்பொருள் ஆய்வுகளைச் செய்வதற்கு முயற்சிகளை எடுத்திருந்தனர். அதற்கு மக்கள் எதிர்ப்பு வெளியிட்டனர்.
சிங்கள, பௌத்த ஆக்கிரமிப்பின் வடிவமாகவே இந்த விடயத்தைப் பார்க்கின்றோம் என அந்த முயற்சிகளுக்கு எதிராக போராடிய மக்களும், அரசியல், சிவில் சமூகத் தரப்பினரும் தெரிவித்துள்ளனர். (க-இ)

## யாழ். எழுமாற்றுச் சோதனையில்

# முல்லைத்தீவு வாசிக்கு கொரோனாத் தொற்று

முல்லைத்தீவு, மார்ச் 29
முல்லைத்தீவு முள்ளியவளை கிச்சிராபுரத்தைச் சேர்ந்த குடும்பஸ்த்தர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.
இவர் யாழ்ப்பாணத்தில் வர்த்தக நிலையம் ஒன்றில் வேலை செய்து வந்த நிலையில், கடந்த புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் எழுமாற்றுப் பரிசோதனையை மேற்கொண்ட பின்னர், முல்லைத்தீவில் உள்ள தனது வீட்டுக்குச் சென்று தன்னைத் தனிமைப்படுத்திக் கொண்டார்.
பரிசோதனை முடிவுகளின்படி இவருக்குத் தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டது.
இதையடுத்து சுகாதாரப்பிரிவினர் அவரை கிளிநொச்சியிலுள்ள கொரோனா மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுள்ளனர். (ற-19)

# சிறிய பஸ்களும் இன்றுமுதல் பணியில்

சுகாதார விதிமுறைகளுக்கு அமைய, அனைத்து சிறிய பஸ்களையும் இன்று தொடக்கம் சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று இலங்கை போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது.
மேல்மாகாணத்தில் பாடசாலைகளின் கற்றல் நடவடிக்கைகள் இன்று ஆரம்பமாகவுள்ள நிலையில்இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.
உரிய வகையில் பஸ்களை சேவையில் ஈடுபடுத்துவதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்று அதன் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்துள்ளார்.
சில நேரங்களில் பாடசாலை சேவை பேருந்துகள் போதுமானவையாக அமையாது.
அவ்வாறான சந்தர்ப்பங்களில் மேலதிக பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க குறிப்பிட்டுள்ளார். (த-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்னாலை இறங்குதுறையில் வெளியிட கடலுணவு வேண்டாம்

## கடற்றொழிலாளர்கள் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 29

பொன்னாலை சந்தியில், கடற்றொழிலாளர்களின் இறங்குதுறையில் வெளி இடங்களில் இருந்து கொண்டுவரப்படும் கடல் உணவுகளை விற்பதற்கு கடற்றொழிலாளர்கள் கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

பொன்னாலை ஸ்ரீகண்ணன் மற்றும் மூளாய் நாராயணன் ஆகிய கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்களான கடற்றொழிலாளர்கள் நேற்றுமுன் தினம் காலை குறித்த இடத்தில் ஒன்றுகூடி, இனிமேல் வெளி இடங்களிலிருந்து கொண்டுவரப்படும் கடலுணவுகளை இந்த இடத்தில் வைத்து விற்கவேண்டாம் என வியாபாரிகளுக்கு தெரிவித்துள்ளனர்.

வேறு இடங்களில் இருந்து கொண்டுவரப்படும் கடல் உணவுகள் தமது இறங்குதுறையில் வைத்து விற்கப்படுவதால், பொன்னாலைக் கடலில் தாங்கள் பிடித்துவரும் கடலுணவுகளை விற்பனை செய்வதில் பெரும் இடர்பாடுகளை எதிர்கொள்ளவேண்டியுள்ளது என்றும் இதனால், தமது குடும்பங்கள் பட்டினியில் வாடவேண்டிய அபாயம் ஏற்பட்டுள்ளது என்றும் கடற்றொழிலாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

பொன்னாலைச் சந்திக்கு அருகில் உள்ள மேற்படி இறங்குதுறையில் வடக்கு மாகாண சபை நிதி ஒதுக்கீட்டில், வலி.மேற்கு பிரதேச சபையால் சில வருடங்களுக்கு முன்னர் மீன் சந்தைக்கான கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. எனினும், குறித்த சந்தை அமைப்பது தொடர்பாக தமக்கு எதுவும் தெரிவிக்கப்படவில்லை எனவும் அது பொதுவான கட்டடம் என்றே தாம் கருதினர் எனவும் கடற்றொழிலாளர்கள் கூறுகின்றனர்.

தற்போது குறித்த சந்தை பிரதேச சபையால் ஏலத்துக்கு விடப்பட்டுள்ளது. சந்தையைச் சூழ பற்றைகள் வளர்ந்துள்ளமையால் அதைப் பயன்படுத்த முடியாத நிலையில் வியாபாரிகள் கடல் உணவுகளை வெளியே வைத்து விற்பனையை மேற்கொள்கின்றனர்.

மன்னார் மாவட்டம் மற்றும் யாழ். மாவட்டத்தின் ஏனைய பிரதேசங்களில் கொள்வனவு செய்யப்படும் கடலுணவுகள் குறித்த பொன்னாலை இறங்குதுறைக்கு கொண்டுவரப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன.

மேற்படி விற்பனையானது தமது அன்றாட வருமானத்தை பாதிக்கும் என கடற்றொழிலாளர்கள் கூறுகின்றனர். எந்தவொரு இடத்திலும் வெளி இடங்களில் இருந்து கொண்டுவரப்படும் கடலுணவுகள் இறங்குதுறையில் வைத்து விற்பனை செய்யப்படுவதில்லை என்பதையும் கடற்றொழிலாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இதனால் இங்குவைத்து விற்பனையை மேற்கொள்ள வேண்டாம் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் பொன்னாலை வட்டார உறுப்பினர் ந.பொன்ராசாவிடம் தொழிலாளர்கள் தெரிவித்தனர். அவர் இந்த விடயத்தை தவிசாளரின் கவனத்துக்கு கொண்டு சென்றார். இது தொடர்பாக விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

(த-இ)

# சிங்கராஜவில் அழிக்கப்படுவது வனப்பகுதிக்குரிய காணியல்ல

## மறுக்கிறார் சுற்றாடல் அமைச்சர்

கொழும்பு,மார்ச் 29

சிங்கராஜ வனம் அழிக்கப்படுகிறது எனக் கூறப்படும் காணி, வனத்துக்குரியதல்ல. அது வனத்திலிருந்து 3.6 கி.மீ தூரத்திலும், ரக்வானை பிரதான வீதிக்கு அருகிலும் அமைந்துள்ளது என்று சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

சிங்கராஜ வனப்பகுதியில் ஹொட்டல் கட்டப்பட்டுள்ளது என பல்வேறு ஊடகங்களில் செய்திகள் வெளியான போதும், உண்மையில் அந்தக் காணி வனப்பகுதிக்குரிய காணியல்ல. காணி தொடர்பான இடைக்கால அறிக்கை பெறப்பட்டுள்ளது. அங்கு காடழிப்பு இடம்பெறவில்லை. அந்தப் பகுதியில் 135 வீடுகள் உள்ளன. அங்கு பெரிய மரங்கள் வெட்டப்படவில்லை. சில மரங்கள் மட்டுமே வெட்டப்பட்டுள்ளன. அந்த பகுதியை வனப்பகுதிக்குள் உள்ளடக்குவதென்றால், அரசு ஒரு கொள்கை முடிவை எடுக்க வேண்டும். வர்த்தமானி அறிவித்தல் விடுக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

(க-இ)

# குளத்தில் நீராடிய சிறுவன் முதலையிடம் சிக்கினான்

திருமலை,மார்ச் 29

குளத்தில் நீராடிய சிறுவர்களில் ஒருவன், முதலையால் இழுத்துச் செல்லப்பட்டுள்ளான்.

இந்தச் சம்பவம் சம்பூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இத்திக்குலம் குளத்தில் நடந்துள்ளது.

15 வயது சிறுவனே முதலையால் இழுத்துச் செல்லப்பட்டுள்ளான்.

பொலிஸ் நிலைய அதிகாரிகள், கடற்படையினர் மற்றும் பிரதேசவாசிகள் ஆகியோர் இணைந்து சிறுவனைத் தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, ஹசலகப் பிரதேசத்தில் மகாவலி கங்கையில் நீராடச் சென்ற தந்தையும், மகனும் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளனர். மகனின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. தந்தையைத் தேடும் பணி தொடர்ந்தும் இடம்பெற்று வருகிறது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(க-இ)

# பரிசளிப்பு விழா பிற்போடப்பட்டது

புத்தூர் பொது நூல் நிலையத்தால் புத்தூர்ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி மண்டபத்தில் இன்று நடைபெறவிருந்த வாசிப்பு மாத பரிசளிப்பு விழா ஒத்திவைக்கப்பட்டுள்ளது.


குடாநாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலையால் இந்த நிகழ்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வு நடத்தப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என நூலகர் காஞ்சனமாலா உதயகுமார் அறிவித்துள்ளார்.

(வ)

# சுகாதார நடைமுறையை மறந்துவிட்டனர் மக்கள்

## மன்னார் சமூக ஆர்வலர்கள் அதிருப்தி

மன்னார், மார்ச் 29



கொரோனா தொடர்பான சுகாதார நடைமுறைகளை மன்னார் மக்கள் முற்றாக மறந்துவிட்டனர் என மன்னார் சமூக ஆர்வலர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கொரோனா கோரத் தாண்டவம் ஆடிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் மன்னார் மக்கள் கொரோனாக் கொத்தணி தொடர்பான எந்த ஒரு அச்சமும் இல்லாமல் தான்தோன்றித்தனமாக செயற்படுகின்றார்கள்.

வியாபார நிலையங்களில் எவரும் முகக்கவசங்கள் அணிவதில்லை ஏனென்று கேட்டால் பி.சி.ஆர் எடுத்து விட்டோம் எனப் பதிலளிக்கின்றனர்.

சுகாதார நடைமுறைகள் ஒழுங்காக பின்பற்றப்படுகின்றவை என்று சுகாதாரத் துறையினரும் பொலிஸாரும் முன்புபோல் சோதனை செய்வதும் இல்லை.

மன்னாரில் இருந்து யாழ் மாவட்டத்துக்கான போக்குவரத்துகள் தினமும் நடைபெற்ற வண்ணமே உள்ளன. இவர்கள் யாழ்ப்பாணம் சென்று யாரைச் சந்திக்கின்றார்கள் எங்கு சென்று வருகின்றார்கள் என்று எவருமே கண்காணிப்பதில்லை எனவும் தெரியவில்லை. யாழ்ப்பாணம் சென்று வரும் வாகனங்கள் தொற்று நீக்கப்படுவதாகவும் தெரியவில்லை.

இவ்வாறு கொரோனா தொடர்பான எந்த ஒரு அச்சமும் முன்னேற்பாடுகளும் இல்லாமல் இருந்தால் யாழ்ப்பாணத்தைவிட மன்னார் மாவட்டம் அதிகமான பாதிப்புகளைச் சந்திக்க நேரிடும் என்று மன்னார் சமூக ஆர்வலர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளார்கள்.

(வ-213)

# ஐ. நா. பிரேரணையை கவனத்தில் எடுக்கோம்

## இலங்கை அரசு பிடிவாதம்

கொழும்பு,மார்ச் 29

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில், இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்டுள்ள பிரேரணை குறுகிய அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டது. இலங்கை தொடர்பில் முன்வைக்கப் பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் ஒருதலைப்பட்சமானவை.

எனவே பிரேரணையிலுள்ள விடயங்களைச் செயற்படுத்த வேண்டிய அவசியம் கிடையாது. பரிந்துரைகளைச் செயற்படுத்துமாறு எவராலும் அரசுக்கு அழுத்தம் பிரயோகிக்கவும் முடியாது.

இவ்வாறு பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, இலங்கையில் இறுதிக்கட்டப் போரில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றன என்று ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்கள் மாத்திரம் முன்வைக்கப்பட்டுள்ளன.

ஆனால் அவை தொடர்பில் இதுவரையில் எவ்வித சாட்சியங்களும், எந்தத் தரப்பினராலும் முன்வைக்கப்படவில்லை. போர் தொடர்பில் நடுநிலையான தன்மையில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையை மனித உரிமைகள் பேரவை கவனத்தில் கொள்ளாமை பேரவையின் நோக்கத்தை வெளிப்படுத்தியுள்ளது.

இலங்கைக்கு எதிரான பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளமையால், நாட்டு மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை. இதனால் இலங்கைக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது. தேசிய பாதுகாப்பைக் கருதிக் கொண்டே புர்கா, மற்றும் நிகாப் ஆகியவற்றைத் தடை செய்யும் யோசனை முன்வைக்கப்பட்டது.

இந்த விவகாரம் காரணமாகவே பெரும்பாலான முஸ்லிம் நாடுகள் பிரேரணை மீதான வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. இருப்பினும் பாகிஸ்தான், மற்றும் பங்களாதேஷ் உள்ளிட்ட நான்கு முஸ்லிம் நாடுகள் இலங்கைக்கு ஆதரவாக வாக்களித்தமை பெரும் வெற்றியாகும் - என்றார்.

(க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரிசிக்கும் அமைகிறது பொருளாதார மத்திய நிலையம்

**வேலைவாய்ப்பு**
க்ராபிக் டிசைனிங், கணக்காளர் மற்றும் சாரதி (AD) அனுமதி பத்திரம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்.
077 354 5115    077 747 4111






கொழும்பு, மார்ச் 29
தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்துக்கு இணையாக அரிசிக்கான பொருளாதார மத்திய நிலையமொன்றை ஆரம்பிப்பது தொடர்பில் அரசு கவனம் செலுத்தியுள்ளது விவசாய அமைப்பின் பிரதிநிதிகளின் வேண்டுக்கோளுக்கமைய இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் வர்த்தக சந்தையில் அரிசியின் விலையைக் கட்டுபடுத்த முடியும் என சுட்டிகாட்டப்பட்டுள்ளது. (ப)

## 13 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 14 . 02 . 1943

உதிர்வு 07 . 04 . 2008



### அமரர் திரு. சுப்பையா கணேசு

*"தந்தை சொல் மிக்க மந்திரமில்லை"*

பங்குனித் திங்களில் பார் விட்டுச் சென்ற
பொறுமையின் திலகமே எங்கள் அப்பா!
இப் பங்குனித் திங்களில் பதின்மூன்று ஆண்டுகள்
பறந்து சென்றதுவே நம் வாழ்க்கைப்
பயணத்தில்...........

என்றும் எம் உயிரான செல்லக்குட்டி
அப்பாவின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்


டச்றோட்,
மானிப்பாய்.

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

பிறப்பு 10 . 06 . 1944

இறப்பு 26 . 03 . 2021



### திரு.சி.கஜமுகலிங்கம்

**(முன்னாள் உதவி பொது முகாமையாளர், சீனோர் நிறுவனம், இலங்கை)**

சுன்னாகத்தை பிறப்பிடமாகவும் கனடாவில் வசித்துவந்தவருமான திரு. சிவலிங்கம் கஜமுகலிங்கம் அவர்கள் 26.03.2021 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான சிவலிங்கம் புவனேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கதிரிப்பிள்ளை செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், தவமணிதேவி அவர்களின் பாசமிகு கணவரும், பிரதிகாஸ் (கனடா), ஜனனி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஆதித்தன் அவர்களின் பாசமிகு மாமனாரும், மாதேஷ், பிரனேஷ், கிரிஷ், அவனிஷ் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற கணேசலிங்கம், காலஞ்சென்ற மகேஸ்வரலிங்கம், விமலேஸ்வரி, சர்வேஸ்வரலிங்கம், உருத்திரலிங்கம் மற்றும் காலஞ்சென்றவர்களான இந்திரலிங்கம், சிவனேஸ்வரலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான செல்வராணி, பவளராணி, பத்மநாதன், சுகிர்தலோசினி, மற்றும் இராசமலர், கெளரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் பூதவுடல் 30.03.2021 செவ்வாய்க்கிழமை, மாலை 6:00 முதல் 9:00 மணி வரையும், 31.03.2021 காலை 11:30 முதல் 12:30 மணி வரையும் Chapel Ridge Funeral Home, 8911 Woodbine Avenue, Markham, ON L3R 5G1 இல் வைக்கப்பட்டு, இறுதிச் சடங்குகள் 31.03.2021 புதன்கிழமை நண்பகல் 12.30 முதல் 2:00 மணி வரை இடம்பெற்று, தொடர்ந்து தகனக் கிரிகைகளுக்காக Highland Hills Crematorium - 12492 Woodbine Aevenue, Gormley, ON L0H 1G0 இற்கு எடுத்துச் செல்லப்பட்டு 2:30 மணியளவில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**மகன்: +14165241367**
**மகள்: +16478544024**
**மருமகன்: +19055155479**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**


# 35 வயது ஆண் உள்ளிட்ட இருவர் கொரோனாவால் உயிரிழப்பு

கொழும்பு, மார்ச் 29
இலங்கையில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி மேலும் இருவர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்தினார்.
அதன்படி, நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 561 ஆக அதிகரித்துள்ளது. கொழும்பு 15 பிரதேசத்தை சேர்ந்த 60 வயதுடைய ஆண் ஒருவரும், மாவனெல்லை பிரதேசத்தை சேர்ந்த 35 வயதுடைய ஆண் ஒருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.
இதேவேளை, இலங்கையில் நேற்று 237 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவர்கள் அனைவரும் ஏற்கனவே கொரோனாத் தொற்றுக்கு உள்ளானவர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். இதற்கமைய நாட்டில் இதுவரை 92ஆயிரத்து 88 பேர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ப)

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 10 . 06 . 1944

மறைவு 26 . 03 . 2021



### சிவலிங்கம் கஜமுகலிங்கம்

எமது ஆலயத்தில் 1996 ஆம் ஆண்டு வரை சீவிய கால அங்கத்தவராகவும் நீண்ட காலமாக பொருளாளராகவும், 2020 ஆம் ஆண்டில் இருந்து சிவலிங்கம் ஞாபகார்த்த நிதியத்தின் பங்காளியும் ஆவார். இவர் எமது ஆலயத்தின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்ட பெருந்தகையாவார். அன்னார் 26.03.2021 இல் கனடாவில் காலமாகியதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய சூராவத்தை முத்துமாரி அம்பாளை பிரார்த்திக்கிறோம்.

**சூராவத்தை முத்துமாரி அம்மன் ஆலய**
**பிரதம குருக்கள்**
**ஆலய பரிபாலன சபையினர்.**

## மரண அறிவித்தல்

### சுப்பையா நந்தகுமார்

(ஓய்வு நிலை நிர்வாக உத்தியோகத்தர் மாகாண திறைசேரி, வடமாகாணம்)



**தோற்றம் 26.01.1955**
**மறைவு 28.03.2021**

தம்பசிட்டி பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் தென்புலோலியூர் சின்னத்தாயை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் சுப்பையா நந்தகுமார் அவர்கள் நேற்று (28.03.2021) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.
அன்னார் சுப்பையா சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும், சதாசிவம் தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், செல்வராணி (இளைப்பாறிய பிரதம முகாமைத்துவ உதவியாளர் பிரதேசபை, பருத்தித்துறை) அவர்களின் அன்புக் கணவரும், வினோத் (பொறியியலாளர்), விவேக் (பொறியியலாளர்), மனோஜ் (மொறட்டுவ, பல்கலைக்கழக இறுதியாண்டு மாணவன்), ஆகியோரின் பாசமிகு தந்தையும் வி.சுவேந்திரநாயகி, சு.கந்தகுமார் (அவுஸ்ரேலியா), சி.இந்திரகுமாரி, சு.உதயகுமார் (அவுஸ்ரேலியா), ஆகியோரின் அன்புச் சகோதரரும், ச.அமிர்தலிங்கம் அவர்களின் அன்பு மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.03.2021) திங்கட்கிழமை முற்பகல் 6.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

**[illegible]**
**புலோலி தெற்கு, புலோலி.**
**0212264292**
**0761062046 (வினோத்)**
**0778915503 (விவேக்)**
**0779108192 (மனோஜ்)**

## அதிபர் உட்பட 10 பேருக்கு தொற்று


கொழும்பு, மார்ச் 29
அகுணுகொலபெலஸ்ஸ, அகுணுகொலவெவ பிரதேசத்தில் பாடசாலையொன்றின் அதிபர், இரண்டு மாணவர்கள் உட்பட 10 பேருக்கு கொவிட் 19 தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
அதன்படி, குறித்த பாடசாலையை தற்காலிகமாக மூட அதிகாரிகளிடம் கோரப்பட்டுள்ளது என்று பிரதேசத்துக்குப் பொறுப்பான சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது. (ப)

## ஜப்பானில் நிலநடுக்கம்

டோக்கியோ, மார்ச் 29
ஜப்பானின் தெற்குப் பகுதியில் உள்ள ரியுக்யு தீவுகளில் நேற்று சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 5.9 புள்ளிகளாக பதிவானது.
இந்த நிலநடுக்கம் பூமிக்கு அடியில் 153 கிலோமீற்றர் ஆழத்தில் மையம் கொண்டிருந்தது என ஜப்பான் புவியியல் ஆய்வு மையம் தெரிவித்தது. எனினும் நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்து தகவல்கள் இல்லை. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்
13 • 12 • 1931

மறைவு
27 • 02 • 2021

கடந்த 27.02.2021 சனிக்கிழமை அன்று இறைபதம் எய்திய

## அமரர் அப்பாப்பிள்ளை நடராசா
### (அன்ரப்பா, செல்லக்கிளி, தம்பிமாமா)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (29.03.2021) திங்கட்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும். வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளைமறுதினம் (31.03.2021) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெறும்.

அத்துடன் அவரின் பிரிவுகேட்கப்பெற்றதும் உடன் நேரில் வந்து துயரத்தில் பங்குபற்றிய அனைத்து உறவினர்கட்கும் நண்பர்கட்கும் தொலைபேசி. மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுதாபம் தெரிவித்தோர்க்கும் மலர்மாலைகள். மலர்வளையங்கள் வைத்தோர்க்கும். துண்டுப்பிரசுரங்கள் வெளியிட்டு அனுதாபம் தெரிவித்தோர்க்கும் இறுதி அஞ்சலி ஊர்வலத்தில் கலந்துகொண்டோர்க்கும் மற்றும் சகல வழிகளிலும் எமக்கு உதவி ஒத்தாசைகள் புரிந்த அனைவர்க்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**பிறவுண் வீதி,**
**கொக்குவில்.**

**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்



தோற்றம்
21 • 10 • 1939

மறைவு
28 • 03 • 2021

## திருமதி பொன்னம்மா சண்முகநாதன்

திசைமனடி, காளி கோவிலடி, சுழிபுரம் கிழக்கை பிறப்பிடமாகவும், இல.88, யாழ் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. பொன்னம்மா சண்முகநாதன் நேற்று (28.03.2021) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை-சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சண்முகநாதனின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அன்னம்மா, சுப்ரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான நடராஜா, திலகவதி, விசாலாட்சி, இராஜதுரை ஆகியோரின் அன்பு மைத்துனியும், மைதிலி, மகிந்தன், சயந்தன், ஜெயந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும், நிமலராஜ், கோஜனா, சாமினி, ரமா ஆகியோரின் அன்பு மாமியாரும் பாவனா, அஜகன், வர்ஷான், வர்ஷானி, காசினி, கதிரவன், மாதுமை ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் கமலாதேவி-தபேந்திரன், கமலநாதன்-ஜெயமலர், அமலா, கமலேஸ்வரி- தியாகேசன், விஜயராணி - கணேசன் ஆகியோரின் அன்புச் சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.03.2021) திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# டோக்கியோ ஒலிம்பிக்; ஏற்றப்பட்டது தீபம்





டோக்கியோ, மார்ச் 29

ஜப்பானின் தலைநகர் டோக்கியோவில் இன்னும் சில வாரங்களில் ஒலிம்பிக் தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில் தற்போது, ஒலிம்பிக் தீபம் ஏற்றப்பட்டுள்ளது. கடந்த வருடம் மத்திய பகுதியில் இந்தத் தொடர் நடைபெற்றிருக்க வேண்டியது. எனினும் கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக ஓர் ஆண்டுக்குத் தொடர் ஒத்திவைக்கப்பட்டு இந்த ஆண்டுதான் நடத்தப்படுகின்றது. இந்த நிலையிலேயே மேற்படி தொடருக்காக ஒலிம்பிக் தீபம் நேற்றுமுன்தினம் அங்கு ஏற்றப்பட்டுள்ளது. (ம)

# கண்ணீர் அஞ்சலி

## பண்டிதர் திரு.தி.பொன்னம்பலவாணர் ஐயா
அவர்களின் மறைவையிட்டு
## ஆறாத் துயர்



பொன்னாலையைப் பிறப்பிடமாகவும் சைவ மரபில் தோன்றி பொன்னாலை சித்திவிநாயகர் ஆலயத்தின் பரம்பரை பிரதம குருவாக பணியாற்றியவரும். ஆலயத்தின் அபிவிருத்தி வளர்ச்சிக்கு பணியாற்றியவரும் புராணங்களை திறம்பட பயன்சொல்பவரும் அடியார்களின் மனங்களை கவர்ந்தவருமாகிய ஐயா அவர்கள் எம்மை விட்டு பிரிந்தது எமக்கு வேதனை அளிக்கின்றது. தொன்மைவாய்ந்த சுழிபுரம் பறாளாய் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் கந்தபுராணத்தை தொடர்ந்து யாழ்ப்பாணத்தின் கந்தபுராண கலாசாரத்தை பேணிவருகின்றது. கந்தபுராண உரையாசிரியராக விளங்கிய அமரர் யோகி கார்த்திகேசு முதற்கொண்டு ஐயா பொன்னம்பலவாணர் வரை மக்கள் மனதை முருகனோடு இணையும் வண்ணம் பலர் உரையாற்றி இருக்கிறார்கள். ஐயா அவர்கள் அன்புடனும் பண்புடனும் பல ஆண்டுகள் மெச்சத்தக்கதாக உரையாற்றி இருக்கின்றார். சென்ற ஆண்டு கந்தபுராணப்படன முடிவின்போது தர்மகர்த்தா சபையினரால் பொன்னாடை போர்த்தி பொற்கிழி வழங்கி கௌரவிக்கப்பட்டார். ஐயா அவர்கள் எம்மை விட்டுப் பிரித்தமை ஆலய அர்ச்சகர்களுக்கும் பரிபாலன சபையினருக்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பு என்பதை தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி !! சாந்தி !!!

**தர்மகர்த்தா சபையினர்**
**சுழிபுரம் பறாளாய் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில்**

# மரண அறிவித்தல்

## திருப்பதியம்மா இராசகோபாலு



**பிறப்பு** 03.07.1940 **இறப்பு** 28.03.2021

திருப்பதியம்மா இராசகோபாலு அவர்கள் நேற்று (28.03.2021) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கார்த்திகேசு இராசகோபாலுவின் அன்பு மனைவியும், இராசலட்சுமி, பரமலிங்கம், காலஞ்சென்றவர்களான சீவரத்தினம், இராசரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவராஜினி (வவுனியா), ஜெயானி (பிரான்ஸ்), சுபாஜினி (ஆசிரியை, யா/ உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை) காலஞ்சென்ற அருட்செல்வன் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற பிரேம்குமார், இரட்ணசிங்கம், சிவானந்தம் ஆகியோரின் அன்பு மாமியாரும், சஜித்திரா, சங்கமிதா, வெண்நிலவன், கிருஷிகா, கிஷாந்தன், கவினஜா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.03.2021) திங்கட்கிழமை உரும்பிராய் வடக்கு, மடத்தடியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் கிழக்கிலுள்ள இளங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
**077 625 7999**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொற்றாளர்கள்...

யாழ்ப்பாணத்தில் கடந்த சில நாள்களாகக் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. நேற்றுமுன்தினம் மட்டும் 143 பேருக்குக் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது. அதையடுத்து யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்றுக்காலை சிறப்புக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யபபட்டிருந்தது. அந்தக் கலந்துரையாடலின் பின்னர் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவதுழ யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இந்த மாதம் மட்டும் 300க்கும் மேற்பட்டோருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது. சுயதனிமைப்படுத்தல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. அடுத்துவரும் நாள்களுக்கு தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். பின்னர் அது குறைவடையும்.

நல்லூர் மற்றும் யாழ்ப்பாணம் மாநகர சுகாதார பிரிவுகளில் தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகிறது. திருநெல்வேலி பாற்பண்ணை பிரதேசம் கண்காணிப்பு வலயத்துக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது- என்றார். (ம-26)

## யாழ்ப்பாணம்...

தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனாத் தொற்று நிலைமை அதிகரித்துள்ளது. அதையடுத்து யாழ்ப்பாணம் கல்வி வலயப் பாடசாலைகள் அனைத்தும் இன்றில் இருந்து ஒருவாரத்துக்கு மூடப்படுகின்றன. வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோருடன் கலந்துரையாடி இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. ஏப்ரல் 5ஆம் திகதிவரை யாழ்ப்பாணம் கல்வி வலயப் பாடசாலைகள் மூடப்பட்டிருக்கும்.

யாழ்ப்பாணம் கல்வி வலயம் தவிர்ந்த ஏனைய கல்வி வலயங்களில் கல்விச் செயற்பாடுகள் அனைத்தும் வழமை போன்று நடைபெறும்- என்றார்.(எ-26)

## திருநெல்வேலி...

சன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயம் மற்றும் திருநெல்வேலி பரமேஸ்வரா கல்லூரி என்பவை மறு அறிவித்தல் வரை மூடப்படுகின்றன. அந்தப் பகுதியில் இருந்து அத்தியாவசிய சேவைகள் மற்றும் தொழில் நிமித்தம் செல்பவர்கள் அலுவலக அடையாள அட்டையைக் காண்பித்துப் பயணிக்க முடியும். சிறப்புக்காரணங்களுக்காக கிராமத்தில் இருந்து வெளியே செல்வோர் பொதுச் சுகாதாரப் பரிசோகர்களிடம் விண்ணப்பித்து அனுமதி கிடைத்தால் பயணிக்க முடியும்.

அதேவேளை, யாழ்ப்பாணம் நகரம் மற்றும் திருநெல்வேலி நகர் கடைகளின் உரிமையாளர்கள் மற்றும் பணியாளர்கள் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

மாணவர்கள் எவருக்கேனும் தொற்று உறுதி செய்யப்பட்டால் பாடசாலை செல்வதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும் -என்றார். (எ-26)

## போதனா...

பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 9 பேருக்கும், வவுனியா மாவட்டத்தில் 3 பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 6 பேர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையிலும், சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவரும், தெல்லிப்பளை மற்றும் ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனைகளில் தலா ஒருவரும் தொற்றுடன் இனங்காணப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இனங்காணப்பட்டவர்களில் 4 பேர் நோயாளர்கள், ஒருவர் தாதியப் பயிற்சியாளர், ஒருவர் பணியாளர் என்று தெரிவிக்கப்பட்டது.

வவுனியா மாவட்டத்தில் வவுனியா பொது மருத்துவமனையில் இருவருக்கும், வவுனியா தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (எ-26)

## 872 மாதிரிகள்...

வடிக்கை இன்றும் முன்னெடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்றுக் காலை 7 மணிக்கு பி.சி.ஆர். பரிசோதனைக்கான மாதிரிகள் எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. நவீன சந்தைக் கட்டடத் தொகுதியின் மூன்று இடங்களில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. சுமார் ஆயிரத்து 200க்கும் மேற்பட்டவர்கள் நேற்றுக் காலை அங்கு திரண்டனர்.

அவர்களில் 872 பேரின் மாதிரிகள் நேற்றுப் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கை இன்றும் காலை 7 மணி முதல் முன்னெடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## நிவாரண...

விசாரணைகளை நடத்தியுள்ளது எனத் தெரியவருகின்றது.

கொரோனா முதலாவது அலையின் போது யாழ்ப்பாணம் மாவட்டம் முடக்கப்பட்டிருந்தபோது மாவட்டச் செயலகத்துக்கு தன்னார்வக் கொடையாளிகள் நிவாரணங்களை வழங்கியிருந்தனர். இவை மக்களுக்கு விநியோகிக்கப்பட்டதில் பல்வேறு முறைகேடுகள் இடம்பெற்றதாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. விநியோகத்தில் குளறுபடி மற்றும் அரசியல் இடையூறுகள் என்பவை குறித்தும் குற்றச்சாட்டுக்கள் எழுப்பப்பட்டிருந்தன.

இது தொடர்பில் விசாரணைகளை ஜனவரி மாதம் 12ஆம் திகதி ஆணைக்குழு ஆரம்பித்திருந்தது. இதன் தொடர்ச்சியாக யாழ்ப்பாண மாவட்டச் செயலக இடர்முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் மற்றும் உடுவில் பிரதேச செயலர் ஆகியோர் கடந்த வாரம் விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தனர். அவர்களிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டன எனத் தெரிவித்து, தன்னார்வத் தொண்டு நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட பயனாளிகள் பெயர்ப் பட்டியல் மாற்றப்பட்டமை தொடர்பிலேயே விசாரணை நடத்தப்பட்டுள்ளது என அறியமுடிகின்றது. அதேவேளை, சுன்னாகம் பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட மலக்கழிவு மீள் சுழற்சி வேலைத் திட்டம் தொடர்பிலும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு யாழ்ப்பாண மாவட்டச் செயலக திட்டமிடல் பணிப்பாளரிடம் விசாரணை நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ,5)

## பயனாளர்...

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆளும் தரப்பின் ஓர் அரசியல் குழு அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றது.

2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் யாழ்ப்பாண மாவட்டத்தில் பயனாளிகள் தெரிவு சுதந்திரமாக இடம் பெறவில்லை என்றும் ஆளும் கட்சி அரசியல்வாதி மற்றும் அவரது உறவினர்களால் இவற்றில் தலையீடு காணப்படுகின்றன என்றும் தொடர்ச்சியாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வந்தன. இவ்வாறானதொரு நிலையில் வடக்கு மாகாண ஆளுநரும், யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவருமான திருமதி சாள்ஸ், பயனாளிகள் தெரிவுப் பட்டியலை பொதுமக்களுக்கு காட்சிப்படுத்த வேண்டும் என்று பணிப்புரை விடுத்திருந்தார். யாழ்ப்பாண மாவட்டச் செயலரால் இந்தப் பணிப்புரை பிரதேச செயலர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. இதற்கு அமைவாக பயனாளிகள் பட்டியலைக் காட்சிப்படுத்தும் நடவடிக்கைககளை பிரதேச செயலகங்கள் முன்னெடுத்துள்ளன.

இதனையடுத்து, ஆளும் கட்சி அரசியல்வாதியின் உறவினர், சில பிரதேச செயலர்கள் மற்றும் மாவட்டச் செயலக உயர் அதிகாரிகள் ஆகியோரைத் தொடர்பு கொண்டு பட்டியலைக் காட்சிப்படுத்தும் நடவடிக்கைகளை நிறுத்துமாறு அழுத்தம் கொடுத்துள்ளார்.

மாவட்டச் செயலகத்தின் உயர் அதிகாரி அதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளார் எனத் தெரியவருகின்றது. (ஒ.5)

## குடும்பத்...

நேற்று மாலை துணுக்காய் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கல்விளான் கிராமத்தில் நடந்துள்ளது.

கல்விளான் குளத்தைச் சேர்ந்த க.சிவகுமார் (வயது -56) என்பவரே உயிரிழந்துள்ளார். தோட்டத்தில் மயங்கி வீழ்ந்த நிலையில் அயலவர்களால் மீட்கப்பட்டு மல்லாவி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டபோதே உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப் படுகிறது. (பு-12)

## வாகனம்...

பெற்றது. இராசலிங்கம் ஜெயபாலன் (வயது-39) என்பவரே உயிரிழந்தவராவார். அவர் புளியம்பொக்கணை நாகதம்பிரான் கோயிலுக்குச் செல்வதற்காக, மின் சுத்திகரிப்பு இயந்திரத்தால் வாகனத்தைக் கழுவியுள்ளார். அந்த இயந்திரத்தில் இருந்த மின் ஒழுக்கால் மின் தாக்கி அவர் உயிரிழந்தார் என்று பொலிஸாரின் முதல் கட்ட விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணை கள் இடம் பெற்று வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ம-113,214)

## காங்கேசன்துறையில்...

கின்றது. அதேவேளை, காங்கேசன்துறைக் கடலில் காணப்பட்ட பொருள் மீன் இனங்களின் உணவுப் பொருள் என்று தேசிய நீர்வாழ் உயிரினங்களின் அபிவிருத்தி அதிகார சபை அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார். மீன் இனங்களின் ஓர் அங்க உணவுப் பொருளாகக் காணப்படும் டயற்றம் எனும் இந்த உணவுப் பொருள் கடல் நீரில் நைதரசன் குறையும்போது ஒட்சியேற்றப்பட்டு கடல்நீரில் மிதக்கும் சந்தர்ப்பங்கள் உள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். இந்தத் திரவப் படலத்தின் மாதிரிகள் யாழ்ப்பாணம் மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவால் நேற்று மாலை எடுக்கப்பட்டுள்ளன.

இந்த மாதிரிகள் தேசிய நீர்வள ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்துக்கு (நாரா) அனுப்பி வைக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. இந்தத் திரவப்படலம் தொடர்பில் ஆய்வுகளின் பின்னர் தீர்மானத்துக்கு வரமுடியும் என்று யாழ்ப்பாணம் மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு தெரிவித்தது. (எ-27)

## புத்தூரில்...

தேக நபர்களாக அடையாளப்படுத்தப்பட்டுக் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று அதிகாலை ஒரு மணியளவில் மேற்படி கொலை இடம்பெற்றுள்ளது என்று கருதப்படுகின்றது. துரைராசா சந்திரகோபால் என்பவரே படுகொலை செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் அடிப்படையில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பழைய பகை காரணமாகவே இந்தக் கொலை நடந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. மேலதிக விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (எ-ம20,26)

## 360க்கு...

செய்யப்பட்டுள்ளன.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமால் குணரத்னவின் ஒப்பத்துடன் வெளியான பெப்ரவரி மாதம் 25ஆம் திகதியிட்ட வர்த்தமானி அறிவித்தலில் இந்த விவரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. '1968ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் சபை சட்டம் 2012ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் சபை ஒழுங்கு விதியின் பிரகாரம், பெயர் குறிப்பிட்ட ஆட்களின் நிரலுக் கான திருத்தம்' என்ற தலைப்பில் வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

2016 நவம்பர் 9ஆம் திகதிய 1992/25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பெயர் குறிக்கப்பட்ட ஆட்களின் நிரல் இதில் திருத்தப்பட்டுள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பளை மருத்துவமனைப் பொறுப்பதிகாரி மருத்துவர் சி.சிவரூபனின் பெயரும் இந்தப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

பிரிட்டன் தமிழர் பேரவை, கனேடிய தமிழர் பேரவை, ஆஸ்திரேலியா தமிழ் காங்கிரஸ், உலக தமிழர் பேரவை, கனேடியத் தமிழர் தேசிய அவை, தமிழ்த் தேசிய அவை, தமிழ் இளையோர் அமைப்பு, உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு ஆகிய அமைப்புக்களும் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர் இந்தப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தின் பின்னணியில் புலம்பெயர் அமைப்புக்களும், நபர்களும் உள்ளனர் என்று இலங்கை அரசு தொடர்ச்சியாக குற்றஞ்சாட்டி வந்தமை குறிப்பிடத்தக்கது.

2015ஆம் ஆண்டுக்கு முன்னரான மஹிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் புலம்பெயர் அமைப்புகள் பலவற்றுக்குத் தடை விதிக்கப்பட்டிருந்த நிலையில், கடந்த நல்லாட்சி காலப்பகுதியில் பிரிட்டன் தமிழர் பேரவை, கனேடியத் தமிழர் பேரவை , ஆஸ்திரேலிய தமிழ்க் காங்கிரஸ், உலகத் தமிழர் பேரவை, கனேடிய தமிழர் தேசிய அவை , தமிழ்த் தேசிய அவை, தமிழ் இளையோர் அமைப்பு மற்றும் உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு உள்ளிட்ட அமைப்புகளின் தடை நீக்கப்பட்டிருந்தது. அத்துடன் 269 நபர்களுக்கான தடையும் கடந்த நல்லாட்சி அரசால் நீக்கப்பட்டிருந்தது.

மீண்டும் அந்த அமைப்புகள் மற்றும் நபர்களுக்கு தடைவிதிப்பதற்கு தற்போதைய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. (எ-22)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஈழ அகதிகளை திரும்ப அனுப்புவதை சுவிஸ் நிறுத்தாது ஆனால் தாமதமாகும்

சூரிச், மார்ச் 29
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான தீர்மானம் நிறைவேறி இருக்கின்ற பின்னணியில் ஐரோப்பிய நாடுகளில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் தொடர்பான கொள்கைகளில் மாற்றங்கள் வருமா? இவ்வாறான கேள்விகளை அகதிகள் நல அமைப்புகள் எழுப்புகின்றன.

சுவிஸ் நாட்டைப் பொறுத்தவரை தஞ்சம் மறுக்கப்பட்ட தமிழர்களைத் தாயகத்துக்குத் திருப்பி அனுப்புவது நிறுத்தப்பட மாட்டாது எனத் தகவல் வெளியாகி உள்ளது. இலங்கை அகதிகளைத் திருப்பி அனுப்புவதில்லை என்று பொதுவான முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை. அந்நடவடிக்கை தொடரும். தொற்று நோய் காரணமாக அது தாமதமாகலாம் என்று சுவிஸ் நாட்டின் குடியேற்றவாசிகளுக்கான செயலகம் தெரிவித்துள்ளது.

'சுவிஸ்இன்போ' செய்தி ஊடகம் இத்தகவலை வெளியிட்டிருக்கிறது. 'தற்போதைய நிலைமையின் அடிப்படையில் இலங்கையில் பொதுவான ஆபத்து இருப்பதாகக் கருதுவதற்கு எந்தக் காரணமும் இல்லை. அங்கு முழு இனக் குழுமங்களும் அபாயத்தில் இல்லை.'

'எனவே சுவிஸில் ஒழுங்கான வதிவிட அனுமதி இன்றித் தங்கி இருக்கின்ற இலங்கைப் பிரஜைகளைத் திருப்பி அனுப்புகின்ற நடைமுறைகளில் மாற்றம் இருக்காது.'

'ஒவ்வொருவருடைய புகலிட விண்ணப் பங்களும் தனித்தனியே கவனமாக ஆராயப்பட்டு வருகின்றன. கொரோனா வைரஸ்தொற்று நோய் காரணமாக அவர்களைத் திருப்பி அனுப்பும் நடவடிக்கைகள் தாமதமாகலாம்.

ஆனால் பொது வான ஒரு முடிவாக அது நிறுத்தப்பட மாட்டாது' இவ்வாறு சுவிஸ் கூட்டாட்சி அரசின் குடியேற்றவாசிகளுக்கான செயலகம் தெரிவித்துள்ளது என 'சுவிஸ்இன்போ' செய்தி குறிப்பிட்டுள்ளது. (ம)



## ருவாண்டா இனப்படுகொலையில் பிரான்ஸுக்குப் பெரும் பொறுப்பு!

### மக்ரோன் நியமித்த குழு அறிக்கை

பாரிஸ், மார்ச் 29
1994இல் உலகை உலுக்கிய ருவாண்டா துட்சி இனப்படுகொலையில் பிரான்ஸுக்கு நேரடியான பங்கில்லாவிடினும் தீவிரமான பெரும் பொறுப்பு இருக்கிறது என்று மிக முக்கிய உள்நாட்டு விசாரணைக்குழு ஒன்றின் அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இனவாதமும் ஊழலும் மிகுந்த ஹட்டு இன அதிபர் ஜுவனல் ஹபரிமானாவின் அரசுக்கு 'அரசியல்' வழிமுறைகளில் 'கண்மூடித்தனமாக' வழங்கிய ஆதரவின் மூலமே பிரான்ஸ் படுகொலைகளுக்கான பொறுப்பைச் சுமப்பதாக அறிக்கை சாடுகின்றது.

1990ஆம் ஆண்டு முதல் 1994ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ருவாண்டா தொடர்பான பிரான்ஸின் கொள்கை 'கருத்தியல் ரீதியில் குருட்டுத்தனமானது' என்று அறிக்கை சுட்டிக்காட்டி உள்ளது. படுகொலைக்கு முன்னரும் அது நிகழ்ந்த போதும் அதன் பின்னரும் பிரான்ஸ் வகித்த பங்கு என்ன என்பதை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக அதிபர் மக்ரோன் நியமித்த வரலாறுத்துறை நிபுணர்கள் அடங்கிய விசேட குழு அதன் ஆயிரம் பக்கங்கள் கொண்ட அறிக்கை யை நேற்று எலிஸே மாளிகையிடம் கையளித்துள்ளது.

100 நாள்களில் சுமார் எட்டு லட்சம் துட்சி இன மக்கள் படுகொலை செய்யப்பட்ட சமயத்தில் பிரான்ஸில் ஆட்சியில் இருந்த அதிபர் பிரான்ஷ்வா மித்ரோனின் ருவாண்டா தொடர்பான கொள்கைகளையே அறிக்கை 'குருட்டுத்தனமானது' என வர்ணிக்கிறது. இனப்படுகொலை நடந்து இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகும் இரு நாடுகளு க்கும் இடையிலான உறவில் இன்னமும் நீறுபூத்த நெருப்பாக இருந்து வருகின்ற இந்த விவகாரத்தை வெளிப்படையான விசாரணைகளின் மூலம் தெளிவுபடுத்த பிரான்ஸ் முயன்று வருகிறது.

அந்த வகையில் இனப் படுகொலையில் பிரான்ஸின் பங்கு என்ன என்பதை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக 2019ஆம் ஆண்டில் ஒரு குழுவை அதிபர் மக்ரோன் நியமித்திருந்தார். 14 நிபுணர்கள் அடங்கிய அந்தக் குழுவுக்கு ஸ்ரீ. றுவாண்டா தொடர்பான ரகசிய அரச ஆவணங்களைப் பரிசீலிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. அந்தக் குழுவின் அறிக்கையே தற்போது அதிபர் மக்ரோனிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (ம)

மியான்மரில் இராணுவம் மிருகத்தனம்

## நேற்றுமுன்தினம் 114 படுகொலை!

**நைபிட்டோ, மார்ச் 29**
**மியான்மரில் நேற்றுமுன்தினம் மட்டும் 114 பேர் அந்த நாட்டு இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டனர்.**




மியான்மரில் ஆங் சான் சூச்சி தலைமையிலான அரசை ஆட்சியில் இருந்து அகற்றிய அந்த நாட்டு இராணுவம் அங்கு இராணுவ ஆட்சியையும் அடுத்த ஓர் ஆண்டுக்கு அவசரகால உத்தரவையும் பிறப்பித் துள்ளது.

இராணுவ ஆட்சிக்கு எதிராக மியான்மரில் பரவலாகப் போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. போராட்டங்களை ஆயுத முனையில் அடக்கிவருகின்றது மியான்மர் இராணுவம். எனினும் யாங்கூன், நைபிட்டோ, மண்டேலா உள்ளிட்ட நகர்களில் போராட்டங்கள் தொடர்கின்றன. இந்த நிலையில் மியான்மர் இராணுவத்தால் நேற்றுமுன் தினம் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் மட்டும் 114 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இது சர்வதேச நாடுகளிடையே கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. இராணுவத்தின் இந்தச் செயலுக்கு ஐக்கிய நாடுகள் சபை, அமெரிக்கா உள்ளிட்ட தரப்புகள் கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளன. (ம)

## கிட்டுப் பூங்காவின் முகப்பு எரிந்து நாசம்!



யாழ்ப்பாணம், மார்ச் 29
நல்லூரில் உள்ள கிட்டுப் (சங்கிலியன்) பூங்காவின் முகப்புப் பகுதி நேற்றிரவு திடீரெனத் தீப்பற்றி முற்றாக எரிந்துள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று இரவு 10 மணியளவில் நடந்துள்ளது. முகப்புப் பகுதியில் தீயை அவதானித்தவர்கள் அது தொடர்பாக யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு அறிவித்துள்ளனர். அவர்கள் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயன்றபோதும் அது பயனளிக்கவில்லை. யாழ்ப்பாணம் மாநகர சபை தீயணைப்பு வாகனம் அந்தச் சமயம், வெளியே சென்றிருந்ததால் உடனடியாகச் சம்பவ இடத்துக்கு வரமுடியவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

தீ விபத்து ஏற்பட்டமைக்கான காரணம் கண்டறியப்படவில்லை. மின் ஒழுக்கோ வேறு தீப்பற்றும் வாய்ப்புக்களோ இல்லாததால், யாரேனும் முகப்புக்குத் தீ வைத்திருக்கலாம் என்று சந்தேகிக்கப் படுகின்றது.

(ஏ-26)

**வேலையாட்கள் தேவை**
யாழ் நகரில் ஆரம்பிக்கப்படவிருக்கும் தொலைத் தொடர்பு நிலையத்திற்கு
➤ முகாமையாளர்
➤ விற்பனைப் பிரதிநிதி
➤ லிகிதர்
➤ கணினி இயக்குனர் (web design,Coreldraw, Photoshop அனுபவத்தோடு)
உடனடியாகத் தேவை.
தொடர்பு: 072 240 1423

**வேலைவாய்ப்பு**
புடைவை நிறுவனமொன்றிற்கு ஆண், பெண் விற்பனையாளர்கள் தேவை. முன் அனுபவம் உள்ளவர்கள், பழக விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். தகுதிக்கேற்ப சம்பளம் + மதிய உணவு வழங்கப்படும்.
தொடர்புகட்கு: 077 855 4840

**விற்பனைக்கு**
வவுனியா நகரில் இருந்து 3km தூரத்தில் 4ஏக்கர் காணி
50 தென்னை உட்பட பலன் தரும் மரங்கள் / சகல வசதிகளுடன் கூடிய வீட்டுடன் காணி முழுவதுமாகவோ பகுதியாகவோ விற்பனைக்குண்டு.
077 515 4971

**காணி விற்பனைக்கு**
யாழ். கோப்பாய் நாவலர் பாடசாலைக்கு
அருகில் 2 பரப்புக்காணி
விற்பனைக்குண்டு.
(நிலப்பரப்பு)
(தரகர் தேவையில்லை)
077 814 7389, 077 596 3845

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org